ஸ்ரீ :

# ஸ்ரீராமாநுஜன் 52

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த மாதந்தோறும் வெளிவரும் பத்ரிகை

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]

ஆசிரியர் : ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

ஸம் 5 | ஏப்ரல்மீ 1953 விஜயஹு சித்திரைமீ | 4 இதழ்

## இராமாநுச நூற்றந்தாதி பாசுரம்—52.

பார்த்தானறுசமயங்கள்பதைப்ப * இப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டு புன்மையினேனிடைத் தான்புகுந்து *
தீர்த்தானிருவினை தீர்த்தரங்கன்செய்ய தாளிணையோ
டார்த்தான் * இவையெம்மிராமாநுசன் செய்யுமற்புதமே.

எம்பெருமானாரானவர் வேதபாஹ்யங்களான ஆறு மதங்களும் துடிக்கும்படியாகத் திருக்கண் செலுத்தினர்; இந்நிலவுலகம் முழுவதையும் தமது கீர்த்தியினாலே மூடிவிட்டார். [உலகமுழுவதும் தம்முடைய கீர்த்தியேயாம்படி செய்துகொண்டாரென்கை.] நீசனான அடியேன் பக்கலிலே தாமாகவே நிர்ஹேதுகக்ருபையினால் வந்து புகுந்து எனது கொடிய பாவங்களைப் போக்கியருளினர். பாவங்களைப்போக்கினதே யல்லாமல் ஸ்ரீரங்கநாதனுடைய அழகிய திருவடிகளோடே என்னை அந்வயிப்பித்தருளினர். ஆகிய இக்காரியங்களெல்லாம் எமக்கு ஸ்வாமியான எம்பெருமானார் செய்தருளின ஆச்சரியச் செயல்கள்—என்றதாயிற்று.

இப்பாட்டில் "அரங்கன் செய்யதாளிணையோடார்த்தான்" என்றதைப்பற்றிச் சிறிது அராயவேண்டியதுண்டு; அமுதனார் பகவத் பக்தியைத் தள்ளி ஆசார்ய பக்தியையே நிதியாகக் கைப்பற்றினவர். எம்பெருமானைக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டேனென்று பல பாசுரங் களில் பேசியிருப்பவர். அவற்றுள் இரண்டு பாசுரங்கள் கேண்மின்; (75) * திருவரங்கர் கைத்தலத்தாழியும் சங்குமேந்தி நங்கண்முகப்பே மொய்த்தலைத்துன்னைவிடே னென்றிருக் கிலும் நின்புகழே மொய்த்தலைக்கும் வந்து * என்று, ஸ்ரீரங்கநாதன் தனது திருக்கையிலே திருவாழி திருச்சங்குகளை ஏந்திக்கொண்டு தம் கண்ணெதிரில் வந்து நின்று தம்புத்தியைக் கெடுத்து உன்னை விடமாட்டேனென்றிருந்தாலும் எம்பெருமானாருடைய திவ்யகுணங்க ளுக்கே தாம் ஈடுபடுவதாகக் கூறினர். (104) * கையில் கனியென்னக் கண்ணனைக் காட் டித்தரிலும் உன்தன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் * என்று, எம்பெருமா னர் எம்பெருமானை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தமக்குக் காட்டிக்கொடுத்தாலும் அவ

னிடத்திலீடுபடமாட்டேனென்றார். இப்படிப்பட்ட வுறுதிகொண்டிருக்குமிவர் இப்பாட்டில் " அரங்கன் செய்யதாளிணையோடார்த்தான் " என்று, ஸ்ரீரங்கநாதனோடே தம்மைப் பொருத்தியதாகத் திருவுள்ளமுகந்து பேசுகிறவிது பொருத்தமாக இல்லையேயென்று சிலர் சங்கிக்கக்கூடும். இதற்குச் சொல்லுகிறோம் கேண்மின்.

பொருந்தாமை யொன்றுமில்லை. ஆசார்யபக்தியைத் தலைக்கொண்டவர்கள் எம்பெருமானிடத்திலே விரோதங் கொண்டவர்களல்லர். பகவத் ஸம்பந்தத்தை யறுத்துக் கொண்டவர்களுக்கு ஆசார்ய ஸம்பந்தம் நிலைநிற்க வழியில்லை. ஆசார்யன் பெரும்பாலும் உபதேசித்தருள்வது பகவத் வைபவத்தையே யாதலால் ஸச்சிஷ்யர்கள் பகவானையுபேக்ஷிக்க எப்படி முடியும்? ஒருகாலும் முடியாது. ஸ்ரீராமாயண புருஷர்களில் கடைக்குட்டியான சத்ருக்நாழ்வான் ஸ்ரீராமஸௌந்தர்யத்திலுமீடுபடாதே பரதாழ்வானையே பற்றிநின்றவர் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட சத்ருக்நாழ்வான் பட்டாபிஷேக காலத்தில் இராமனுக்குக் குடைபிடித்ததாக வான்மீகி முனிவர் கூறியிருக்கிறார். அன்றியும், மதுரகவியாழ்வார் " தேவுமற்றறியேன் குருகூர்நம்பி பாவினின்னிசை பாடித்திரிவனே " என்று நம்மாழ்வாரையொழிய வேறுதெய்வமறியே னென்றார்; என்றவர்தாமே அடுத்த பாசுரத்தில் " தேவபிரானுடைக் கரியகோலத் திருவுருக்காண்பன் நான் " என்று மருளிச்செய்தார். கீழ்ப்பாட்டில் வெளியிட்ட ஸித்தாந்தத்திற்கு இது விருத்தமன்றோவென்று சிலர் சங்கிக்கக் கூடுமென்று அவிரோதத்தையும் தாமே நிரூபித்தார் " பெரியவண்குருகூர் நகர்நம்பிக்கு ஆளுரியனாய் அடியேன் பெற்ற நன்மையே " என்று. இதனால் தேறினதென்னவெனில்; ஸச்சிஷ்யர்களுக்கு ஆசார்யனே பரதேவதை. தங்களுடைய பக்திக்கு ஆசார்யனே ப்ரதாந லக்ஷ்யம். அவ்வாசார்யனுடைய திருவுள்ளவுகப்புக்காகவாயிற்று பகவத் விஷயம் உபாதேயமாவது. இதுதான் சாஸ்த்ரார்த்த தத்வம்.

ஆக, தலைசிறந்த ஆசார்ய பக்தியையுடையவர்கள் எம்பெருமானை விட்டொழிக்க வேணுமென்றாவது விட்டொழித்தவர்களென்றாவது நினைக்கத்தகாது. அவர்கள் ஸ்வாதந்த்ர்யேண எம்பெருமானைப் பற்றுமவர்களல்லர். ஆசார்யன் காட்டிக்கொடுக்க ஆசார்ய ப்ரீத்யர்த்தமாகப் பற்றுமவர்கள். இதையே ஆண்டாள் *விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல் அதுகாண்டுமே * என்ற பாசுரததினால் வெளியிட்டருளினாள். ஆகவே * அரங்கன் செய்யதாளிணையோடார்த்தான் * என்றவிதில் பொருந்தாமையொன்றுமில்லை, மிகவும் பொருத்தமேயுள்ளதென்று கொள்க. ... ... .... *

---

# ஸ்ரீபெரும்பூதூர் மஹோத்ஸவம்

---

சித்திரையில் செய்யதிருவாதிரையில் திருவவதரித்தருளின ஸ்வாமி எம்பெருமானார்க்கு திவ்ய தேசங்கள் தோறும் தேவாலயங்கள் தோறும் மடங்கள் தோறும் திருமாளிகைதோறும் மஹோத்ஸவம் நடைபெற்றாலும் ஸ்வாமியின் திருவவதாரஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரில் நடைபெற்ற மஹோத்ஸவத்தின் சிறப்பு வாசாமகோசரம். 10—4—53 முதல் 20—4—53 வரை இம்மஹோத்ஸவம் லோகோத்தரமான முறையில் நடைபெற்றது. இதுவரையில் எந்த ஸம்வத்ஸரத்திலும் இவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லையென்று

பலரும் ஒருமிடறாகப்புகழும்படியாகவே நடந்தேறியது. நாலைந்து மாதங்களாகவே ஊரெங்கும் தீர்த்தஸம்ருத்தி மிக நன்றாக வாய்த்திருந்தபடியால் தென்னாடுகளிலிருந்தும் வடநாடுகளிலிருந்தும் அபரிமித பக்த பாகவதர்கள் திரண்டு வந்திருந்து ஆனந்தமாக உத்ஸவாநுபவம் செய்தார்கள். பல நூற்றுக்கணக்கான ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்து இயல் கோஷ்டியையும் வேதபாராயண கோஷ்டியையும் அலங்கரித்து "பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச்சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை" என்றும், "கண்டோங் கண்டோங் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்" என்றும் ஒவ்வொரு நிமிஷத்திலும் உள்குழைந்து பேசும்படி ஸேவை ஸாதித்த வைபவம் மிகவிலக்ஷணமானது. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. திருமலை திருப்பதி சிறிய கேள்வி ஜீயர் ஸ்வாமியும் எழுந்தருளியிருந்து கோஷ்டியை நிர்வஹித்தருளினது விசேஷித்துக் குறிப்பிடத்தகுந்தது.

உத்ஸவம் காலகாலத்தில் நடந்து வந்தது. தினந்தோறும் காலை வேளைகளில் 7-மணியிலிருந்து 10-மணிக்குள்ளாகவும், இரவு வேளையிலும் அப்படியே 7-மணியிலிருந்து பத்துமணிக்குள்ளாகவும் திருவீதிபுறப்பாடு வெகு சிறப்பாக நடந்துவந்தது. தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் உடனிருந்து வெகு ச்ரத்தையோடு ஒருவகை லோபமுமில்லாமல் குறிக்கொண்டு நடத்திவைத்தது குறிப்பிடத்தக்கது.

அத்யாபக ஸ்வாமிகளுக்கும் வேதபாராயண ஸ்வாமிகளுக்கும் பக்த பாகவதோத்தமர்களின் உதவியைக்கொண்டு ஆயிரம் ரூபாய்வரையில் சேகரிக்கப்பட்டு ஸன்மானம் வழங்கப்பட்டது. * செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுஞ்சிறந்த பெரும்பூதூர்ச் செல்வம் மேன்மேலும் மல்குக. நித்யஸ்ரீர் நித்யமங்களம்.

---

# வித்யாவிலாஸிநீ ஸபையின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

ஸ்ரீ பெரும்பூதூரில் விளங்கும் உபயவேதாந்த வர்த்திநீயென்னும் ஸம்ஸ்க்ருத காலேஜில் சாஸ்த்ராதிகாரிகளான வித்யார்த்திகள் கூடி வித்யாவிலாஸிநீ ஸபையென்னும் பெயரால் ஒரு ஸபையை ஸ்தாபித்து அதன் மூலமாக அடிக்கடி உபந்யாஸங்கள் நடத்திவருகிறார்கள். அந்த ஸபைக்கு இருபத்தைந்து வருஷ பூர்த்தியானதை முன்னிட்டு 16—3—53 தேதியன்று வெள்ளிவிழாக்கொண்டாட்டம் மேலேகுறித்த ஸம்ஸ்க்ருத காலேஜில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. சென்னை ப்ரதம மந்திரியான ஸ்ரீமான் C. ராஜகோபாலாசாரியார் அக்ராசனம் வஹித்தார். எண்டோமெண்டு இலாகா மந்திரியாகிய ஸ்ரீமான் K. வெங்கடஸாமி நாயுடு முதலான பல கனவான்களும் அனேக வைதிக வித்வான்களும் வந்திருந்து ஸபையை யலங்கரித்தார்கள்.

இக்கலாசாலையில் நெடுநாள் அத்யக்ஷ பதவியை அலங்கரித்திருந்து இப்போது விச்ராந்தராயெழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீமத். உ. வே. மஹாவித்வத்ஸார்வபௌம. ஆஸூரி ராமாநுஜாசார்ய ஸ்வாமியின் திருவுருவப்படம் கலாசாலையில் திறந்து வைக்கப்பட்டதொன்றே இவ்விழாக்கொண்டாட்டத்தின் தலையான செயலாகக் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீமான் திருநீர்மலை கோமடம். ஸ்ரீநிவாஸாசார்ய சிரோமணியின் பரிச்ரமபலனாக இவ்வி

ழாக்கொண்டாட்டம் இனிது நடைபெற்றது. அவ்வமயம் எடுக்கப்பட்ட புகைப்படமும் இதன்கீழ் காட்சி தருகின்றது.




## அனந்தாழ்வான் மஹோத்ஸவம்

எம்பெருமானார் திருவடிகளில் அத்தாணிச்சேவகர்களில் தலைவராயெழுந்தருளியிருந்த திருமலையனந்தாழ்வான் ஸ்ரீ காஞ்சீபுரியில் வடவண்டை மாடவீதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருப்பது உலகமறிந்ததே. ஸ்ரீ மதுரகவிகளின் திருவவதார நன்னாளாகிய சித்திரையில் சித்திரை நாளிலேயே இவ்வாசார்யரும் திருவவதரித்தருளினபடியால் இவர்க்கு இப்போது வருஷோத்ஸவம் நடைபெற்று வருகின்றது. எம்பெருமானாருடைய திருவவதார நன்னாளாகிய திருவாதிரையிலிருந்து (19—4—53 லிருந்து) இம்மஹோத்ஸவம் நடைபெறுகின்றது. இவ்வாசிரியர் திருவவதரித்து இற்றைக்கு 900 வருஷமாகிறது. விஜய வருஷத்திலேயே திருவவதாரமென்று தெரியவருவதனால் அதையொட்டி இவ்வாண்டில் அதிகப்படியாக தினந்தோறும் காலை வேளைகளில் திருவீதிப்புறப்பாடும், மாலை வேளைகளில் வித்வான்களின் உபந்யாஸ கோஷ்டியும் விசேஷமாக நடந்து வருகின்றது.

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

பிஷ்டபேஷணம்போல் தெரிவிப்பதில் மனம் உத்ஸாஹங்கொள்ளவில்லை. ஆனாலு[ம்] தெரிவிக்கவேண்டியது அவச்யமாகிறது. இவ்வருஷம்தோன்றி நான்கு மாதங்களாகியு[ம்] பலர் இன்னும் சந்தாத்தொகை அனுப்பாமலிருக்கிறார்கள். அன்னவர்களுக்கு நாம் தனிப் பட கடிதம் எழுதப்போகிறதில்லை. தயவுசெய்து விரைவில் அனுப்பிவிடவேண்டுமென்று ஞாபகப்படுத்துகிறோம்.

**மானேஜர்—ஸத்க்ரந்தப்ரகாசன ஸபை.**

ஸ்ரீ:
ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



# எம்பெருமானாரறுபத்திரண்டு

## (ஸ்ரீ காஞ்சீ· ப்ர. அண்ணங்கராசாரியர்)

[எம்பெருமானார் விஷயமாக அறுபத்திரண்டு வார்த்தைகளை விஜ்ஞாபிக்கும் முகத்தால் அவருடைய பலவகைப்பெருமைகளை வெளியிட்டு மகிழ்வேன்.]

1. "ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும் வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர்!—ஏழ்பாருமுய்ய வெதிராச ருதித்தருளும் சித்திரையில் செய்யதிருவாதிரை" என்ற மணவாள மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்தியை முந்துற அநுஸந்தித்து, சித்திரையில் திருவாதிரையைச் சிறிது சிந்தனை செய்வோம். இந்த நன்னாளின் சிறப்பை நம் மணவாள மாமுனிகள் தாமே ஒரு சீரிய செய்யுளினால் ஆர்த்திப் பிரபந்தத்தில் வெளியிட்டருளியுள்ளார். அதுதன்னில் ஸ்வாமியின் பெருமைகள் பெரும்பாலும் அடங்கியுள்ளன.

2. " சங்கரபாக்கரயாதவபாட்ட ப்ரபாகரர்தங்கள்மதம்
சாய்வுற வாதியர் மாய்குவரென்று சதுமறைவாழ்ந்திடுநாள்
வெங்கலியிங்கினி வீறுநமக்கிலையென்று மிகத்தளர் நாள்
மேதினி நஞ்சுமையாறுமெனத் துயர்விட்டு விளங்கிய நாள்
மங்கையராளி பராங்குசமுன்னவர்வாழ்வு முளைத்திடுநாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலைமற்றுமுவந்திடுநாள்
செங்கயல்வாவிகள்சூழ் வயல்நாளுஞ்சிறந்த பெரும்பூதூர்ச்
சீமானிளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரை நாளே." என்பதேயது.

(இப்பாசுரத்தின் தாற்பரியத்தைச் சுருங்க வுரைப்போமிங்கு.)

3. எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு முன்னே பலபல மாய மதத்தவர்கள் இவ்வுலகில் மலிந்து வேதங்களுக்கு ஏலாத பொருள்களை ஏறிட்டுரைத்துத் தத்துவார்த்தங்களை க்ஷோபப்படுத்தியிருந்தார்கள்; அதனால் வேதங்களும் "நமது கதி இப்படியாயிற்றே!" என்று சாலவும் வருந்திக்கிடந்தன. எம்பெருமானார் திருவவதரித்தவன்றே அவற்றின் வருத்தம் தொலைந்து அவை வாழ்ச்சிபெறத் தொடங்கிவிட்டன. "நாரணனைக்காட்டிய வேதம் களிப்புற்றது" என்றார் அமுதனாரும். இதனால் ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்யத்வம் ஸ்வாமியொருவர்க்கே தகுமென்றதாயிற்று.

4. அன்றியும், இந்நிலவுலகில் கலிபுருஷன் நெடுநாளாகச் செங்கோல் செலுத்திக்கொண்டு தனது பராக்ரமமே ஓங்கி வளருமாறு அரசாட்சி புரிந்து வந்தான்; அன்னவனும்

எம்பெருமானார் திருவவதரித்தவன்றே "கலியுங் கெடுங் கண்டுகொண்மின்!" என்ற மூதுவர் மொழி பலிக்குங்காலம் வாய்த்ததுபோலுமென்று துணிந்து இனிநாம் மாள்வதன்றி வாழ்வதற்கில்லையென்று தளர்ச்சி யெய்தத் தொடங்கிவிட்டான். "இறந்தது வெங்கலி" என்றார் அமுதனாரும். "கலிகோலாஹலக்ரீடாமுதாக்ரஹமபாஹரத்" என்றார் பட்டரும்.

5. அன்றியும், பூமிப்பிராட்டியானவள் 'ஸர்வம்ஸஹா' என்று பெயர்பெற்றிருந்தாலும், நல்லார்கள் பலபல கோடிக்கணக்காகத் தன்மீது வாழப்பெற்றாலும் அவர்களைப் பஞ்சச்சுருள்போல் சிறிதும் ஆயாஸமின்றித் தாங்கி நின்று, தீயவர் ஒருவரிருவர் இருப்பினும் இரும்பு மூட்டை தாங்குவதனால்போல் மிகமெலிந்து நிற்பள். உடையவர் திருவவதாரத்திற்கு முன்னே நல்லவர்கள் மிக மெலிந்து தீயவர்களே மிக மலிந்திருக்கப்பெற்றதனால் பூமிப்பிராட்டி பொறுக்கொணாச் சுமையினால் மிகவும் துயருற்றுக் கிடந்தாள்; அன்னவள் எம்பெருமானார் திருவவதரித்தவன்றே, 'இனி இந்நிலவுலகில் தீயார் ஒருவருமின்றிக்கே அனைவரும் நல்லவராகவே வாழ்ச்சி பெறுவார்கள்' என்று சிக்கெனத்துணிந்து இனி நமக்குப் பொறுக்கவொண்ணாத பாரம் சிறிதுமிராதென்று தேறித் துயர்விடத் தொடங்கினள். "பல்கலையோர் தாம் மன்னவந்த விராமானுசன்" என்றார் அமுதனாரும்.

6. அன்றியும், பல ஆழ்வார்களும் ஆசாரியர்களும் திருவவதரித்து, அருமருந்தன்ன ஸ்ரீஸூக்திகளை உதவியருளியிருந்தாலும் அவற்றுக்கு ஸர்வதோமுகமான ப்ரசாரம் ஏற்படாமலும் அழகிய வியாக்கியானங்கள் அமையாமலுமிருந்ததனால் "நம்முடைய அரிய பெரிய காரியங்கள் உலகுக்குப் பெரிதும் பயன்படவில்லையே" என்று அவர்களெல்லாரும் களிப்பின்றியே குன்றியிருந்தனர்; எம்பெருமானார் திருவவதரித்தவன்றே "இனி ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதி க்ரந்தங்கள் ஓங்கி வளரப்பெறுமாதலால் நமக்கொரு குறையில்லை; நாம் செய்திருந்த காரியங்களெல்லாம் சதசாகமாகப் பணைக்கும்படியான பாக்கியம் வாய்க்க நற்சமயம் வந்துவிட்டது" என்று துணிந்து அன்னவர்கள் அளவிலாத ஆனந்தமெய்தத் தொடங்கினர். "தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்டமிழ்மறை வாழ்ந்தது" என்றார் அமுதனாரும்.

7. அன்றியும், எம்பெருமான் தான் பரமபதத்தில் பரவாஸுதேவனாக வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செலுத்தியிருக்குமிருப்பிலும், திருப்பாற்கடலில் அடியார்கள் கூக்குரல் செவிப்படுமாறு வெள்ளைவெள்ளத்தின் மேலொருபாம்பை மெத்தையாக விரித்திருந்து அதைவிட்டுப் புறப்பட்டு ராவண கும்பகர்ண கம்ஸ சிசுபாலாதிகளைத் தொலைத்திட்டு உலகை வாழ்விக்க ராமகிருஷ்ணாதி விபவாவதாரங்கள் செய்தவற்றிலும், கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையுமிருப்பிலும் த்ருப்தி பெறாதே, கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் முதலான திருப்பதிகளிலே * பின்னானார் வணங்குஞ் சோதியாய் ஸந்நிதி பண்ணியிருந்தும், அந்தத் திருப்பதிகளைத் திருத்திப் பணிகொள்வாரில்லாமையாலே அர்ச்சாவதாரமும் பயனற்றதாக ஆய்விட்டதே! என்று வருந்தவேண்டியிருந்தது எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு முன்னே. இப்பெரியார் இவ்வுலகினிற் போந்தவன்றே—"ஸர்வதேச தசாகாலேஷு அவ்யாஹத பராக்ரமா, ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம். ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸர முஜ்வலா, திகந்த வ்யாபிநீ பூயாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ" என்று நீடூழியூழி நாடெங்கும் போற்றும்படியாக ஸகல திவ்ய தேசங்களிலும் அற்புதமான சீர்திருத்தங்களும் கைங்கர்ய அபிவிருத்திகளும் இனி ஒளிமல்குமென்று துணிந்து அர்ச்சாவதார எம்பெருமான்கள் குறை தீர்ந்து மகிழத்தொடங்கினர். ஆக இங்ஙனம் வேதவேதாந்தங்கள் களிப்புறவும், கலிபுருஷன் தேய்வுறவும், மண்மாது மகிழ்

வுறவும், பூருவர்கள் யாவரும் பொலிவுறவும், எம்பெருமான் தானும் இன்புறவும் அமைந்த நன்னாள் சித்திரையில் செய்ய திருவாதிரை யொன்றேயாம்.

8. இத்திருநன்னாளிலே தோன்றிய பேராசிரியர் ஆதிசேஷனுடைய அவதாரமென்றும் மற்றும் பலவாறாகவும் பெரியோர் பணிப்பர். நூற்றந்தாதியில் "அடையார் கமலத் தலர்மகள் கேழ்வன் கையாழி யென்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும் ஒண்சார்ங்க வில்லும் புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற்கென்றிடையே இராமாநுசமுனியாயின விந்நிலத்தே." என்னும் பாசுரத்திலும், "ப்ரதயந் விமதேஷு தீக்ஷ்ண பாவம் ப்ரபுரஸ்மத் பரிரக்ஷணே யதீந்த்ர:, அப்ருதக் ப்ரதிபந்ந யந்மயத்வைர் வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:" என்ற யதிராஜ ஸப்ததி ஸூக்தியிலும் "எம்பெருமானார் பஞ்சாயுதாழ்வார்களின் அவதாரம் என்னும் விஷயம் காட்டப்பட்டுள்ளது. "விச்வம் த்ராதும் விஷய நியதம் வ்யஞ்ஜிதாநுக்ரஹஸ் ஸந் விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:" என்கிற யதிராஜ ஸப்ததி ஸூக்தி யொன்றில் விஷ்வக்ஸேநாவதாரமென்னும் விஷயம் கூறப்பட்டுள்ளது.

9. திருவனந்தாழ்வானுடைய திருவவதாரமென்னும் விஷயத்தைப் பற்பல ஆசிரியர்கள் பேசியுள்ளார்கள். அதனை சேஷாவதாரச் சிறப்புநூலில் விரியவுரைத்தோம். அங்கே கண்டுகொள்வது. எம்பெருமானாருடைய பூர்ண கடாக்ஷ பாத்ரபூதராய் அவர்திறத்துத் தேவு மற்றறியாதே ஈடுபட்டிருந்த மஹாப்ராஜ்ஞரான கருட வாஹன பண்டிதர் பணித்த திவ்ய ஸூரி சரிதமென்னும் மஹா காவ்யத்தில் பதினேழாவது ஸர்க்கத்தில் ஸ்ரீராமாநுஜ வைபவம் சொல்லப்புகுந்தவிடத்து "பௌஜங்கம் வபுரபஹாய சேஷபோகீ யத்ரூபம் த்ரிபுவநவந்திதம் ஜகாம" என்று பணித்திருப்பதும், உடையவருடைய அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவரான வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவ க்ரந்தத்தில் "வேதாந்த ஸித்தாந்த ஸமர்த்தநாய பாஹ்யாந்தரப்ராந்த மதாபநுத்த்யை, சேஷாம்சக: கேசவயஜ்வதேவ்யாம் தேஜோநிதி: கச்சிதிஹாவிராஸீத்" என்றுள்ளதும் முக்கியமாக இங்கு அநுஸந்தேயங்கள்.

10. இராமாநுச நூற்றந்தாதியில் "நல்லார் பரவுமிராமாநுசன்" என்ற எண்பதாம் பாசுரத்தின் வியாக்கியானத்தில்—"அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத:பரம், பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ ராமாநுஜஸ் ஸ்ம்ருத:" என்கிற ஆர்ஷவசனம் உதாஹ்ருதமாகக் காண்கிறது. இந்த ச்லோகத்தில் "கலௌ கச்சித் பவிஷ்யதி" என்கிற பாடமாகவும் கடையடிகாண்கிறது. இப்பாடமே பொருத்தமானதென்பர்.

11. இப்பேராசிரியருடைய ப்ரபாவ விசேஷங்களைப் பார்க்குமிடத்து, நித்யமுக்தர்களனைவரும் திரண்டுவந்து திருவவதரித்தபடியோ! என்றும் சங்கிக்கலாயிருக்கும். அபரிச்சேத்ய ப்ரபாவங்கள் மிகுந்த இவ்வாசார்ய சிகாமணி தம்முடைய திருவடி ஸம்பந்தத்தினால் பிறபட்ட ஆசாரியர்களுக்கும், தம்முடைய திருமுடி ஸம்பந்தத்தினால் முற்பட்ட ஆசார்யர்களுக்கும் உஜ்ஜீவனம் தந்தருளியதாக அக்காலத்திலிருந்த மஹான்கள் உபச்லோகித்துள்ளார்கள். இதைச்சிலர் அதிசயோக்தியென்றுகொண்டாலும் அங்ஙனம் சிறப்பித்துக் கூறுதற்கு ஏற்ற பெருமேன்மை இப்பெரியார் பக்கல் நிரம்பியிருந்ததென்று கொள்ளத் தட்டில்லையாயிற்று. [இதைப்பற்றி மேலே விவரிப்போம்.]

12. எம்பெருமானாருடைய திருமேனியின் தோற்றமே அநுபவ ரஸிகர்களுக்குத் தேனும் பாலுமமுதுமாக உள்ளுந்தோறு முள்ளம் தித்திக்கும். "காணிலுமுருப்பொலார்"

என்னும்படி யிராநின்ற யதிகளின்படியன்றியே எம்பெருமானாருடைய பரம விலக்ஷணமான திவ்யமங்கள விக்ரஹ ஸந்நிவேச அமைதியை "காஷாய சோபி கமநீயசிகாநிவேசம் தண்டத்ர யோஜ்ஜ்வலகரம் விமலோபவீதம், உத்யத்திநேசநிப முல்லஸதூர்த்வ புண்ட்ரம் ரூபம் தவா ஸ்து யதிராஜ! த்ருசோர் மமாக்ரே" என்றும், "உபவீதிநமூர்த்வ புண்ட்ரவந்தம் த்ரிஜகத் புண்யபலம் த்ரிதண்ட ஹஸ்தம், சரணாகதஸார்த்தவாஹமீடே சிகயா சேகரிணம் பதிம் யதீநாம்" என்றும் பூருவர்கள் பரம போக்யமாகப் பேசி யநுபவித்துப்போந்தார்கள்.

13. இவ்வடிவழகுவிஷயமாக இன்சுவையே வடிவெடுத்ததென்னலாம்படி எம்பார் அருளியுள்ள பாசுரம், "பற்பமெனத்திகழ் பைங்கழலுன்றன் பல்லவமே விரலும், பாவனமாகிய பைந்துவராடை பதிந்தமருங்கழகும், முப்புரிநூலொடு முன்கையிலேந்திய முக்கோல் தன்னழகும், முன்னவர்தந்திடு மொழிகள் நிறைந்திடு முறுவல்நிலாவழகும், கற்பகமேவிழி கருணைபொழிந்திடு கமலக்கண்ணழகும், காரிசுதன்கழல் சூடியமுடியும் கனநற்சிகைமுடியும், எப்பொழுதும் எதிராசன்வடிவழ கென்னிதயத்துளதால் இல்லையெனக்கெதி ரில்லையெனக் கெதி ரில்லையெனக்கெதிரே." என்பதாம்.

14. இவ்வாசிரியர்க்கு ராமாநுஜத் திருநாமம் எதனால் இடப்பட்டதென்று ஆராயுமளவில், முன்னோர்களுடைய நூல்களிலிருந்து இங்ஙனே அறியலாகிறது;—ஸ்ரீராமாநுஜனென்னுஞ் சொல் ஸ்ரீராமபிரானுடைய தம்பி யென்னும் பொருள்கொண்டது. தசரதாத்மஜனை இராமபிரானுக்கு இளையோனாக அவதரித்த லக்ஷ்மணன் என்றபடி. இவன் இடைவீடின்றிக் கைங்கரியமே போதுபோக்காக இருந்தது போல ஸ்வாமி உடையவரும் கைங்கர்யத்தையே பெருஞ்செல்வமாகக் கொண்டிருக்கப் போகிறாரென்பதை அவதார ஸமயத்திலேயே யோகத்ருஷ்டியினாலறிந்தவரும் இவர் தமக்கு மாதுலருமான திருமலைநம்பியென்னு மாசிரியர் இவர்க்கு ஸ்ரீராமாநுஜனென்று நாமகரணஞ் செய்தருளினார்—என்பதாக.

15. ஸ்ரீராமபிரான் கைகேயியின் வரப்ரார்த்தனையை நிறைவேற்றும் வியாஜமாகக் கானகஞ் செல்லப் புறப்படும்போது இளையோனான இலக்குமணன் தானும் நிர்ப்பந்தித்துத் தன்னையும் உடனழைத்துச் செல்லும்படி வேண்டினன். தானும் காட்டுக்கு வர விரும்பியது எதற்காகவென்னில்; *பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரி ஸாநுஷு ரம்ஸ்யதே, அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச் ச தே * என்பது அப்போது இவ்விளைய பெருமானுடைய வார்த்தையாக ஸ்ரீ ராமாயணத்தில் உலகறிய நிற்கும் ச்லோகம். "தேவரீர் பிராட்டியோடுகூட சித்திரகூடத்தாழ்வரை முதலானவிடங்களில் இன்புறும் போது அடியேன் ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி வழுவிலாவடிமைகள் செய்யப்போகிறேன்" என்பது மேலே குறித்த ச்லோகத்தின் கருத்து. இப்படியே அவ்விளையோன் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அடிமையெனும் அத்தாணிச் சேவகஞ் செய்தே கழித்தனன். அதுபோலவே ஸ்வாமி உடையவரும் தம் வாழ்நாள் முழுவதையும் தொண்டுபூண்டே கழித்தருளினரென்பது அவரது திவ்ய சரிதையினால் மிகப் பிரசித்திபெற்ற விஷயம். *தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்ததும் மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்ததும் முதலானவை ஒப்புயர்வற்ற கைங்கர்யங்களன்றோ. ஆக இக்காரணம் பற்றியே ஸ்வாமிக்கு ராமாநுஜனென்னுந் திருநாமமிடப்பட்டதென்பது மிகப் பொருத்தம். லக்ஷ்மண முனியென்றும் இளையாழ்வா ரென்றும் வழங்குகின்ற அவரது திருநாமங்களும் இதனை வற்புறுத்தி நிற்கும்.

16. இனி, ராமாநுஜனென்ற திருநாமம் லக்ஷ்மணனுக்குப்போலவே கண்ணபிரானுக்கும் பொருந்தியதே. 'பலராமனுடைய தம்பி' என்னுங்காரணத்தினால் கண்ணபிரானை

ராமாநுஜனென்னக் குறையில்லை யன்றோ. ஆனதுபற்றியே முகுந்தமாலை யென்னும் உலக மறிந்த ஸ்தோத்திரத்தில் "ஹே ராமாநுஜ ஹே ஜகத்த்ரய குரோ! ஹே புண்டரீகாக்ஷ மாம் ஹே கோபீஜநநாத! பாலய" என்று ராமாநுஜனென்ற திருநாமத்தினாலே கண்ணபிரான் அழைக்கப் பட்டுள்ளான். ஆகவே கண்ணபிரானுடையதான அந்தத்திருநாமமே ஸ்வாமி உடைய வர்க்குச் சாத்தப்பட்டதென்று கொள்ளுகிற ஸம்பிரதாயமும் ஒன்றுண்டு. ஸ்ரீநிகமாந்த தேசிகன் பணித்த யதிராஜ ஸப்ததியில் "சமிதோதய சங்கராதிகர்வ: ஸ்வபலாத் உத்த்ருதயாதவ ப்ரகாச:, அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:" என்ற ச்லோகம் இதற்கு ஆதாரமாக அவதரித்ததாகும்.

17. கண்ணபிரானுக்கும் உடையவர்க்கும் பல படிகளாலும் ஸாம்யமுண்டு. கண்ண பிரானாகத் தோன்றின பகவான் செய்த செயல்களும் ஸ்ரீராமாநுஜர் செய்தருளின செயல் களும் ஒத்திருக்கையாகிற ஒற்றுமைநயம் ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. மேலே யெடுத்துக் காட்டிய *சமிதோதய சங்கராதிகர்வ: இத்யாதியான யதிராஜஸப்ததிச்லோகரத்னத்தில் கண்ண னுக்கும் உடையவர்க்கும் ஸாம்யம் சிலேடையினால் நிர்வஹிக்கப்பட்டுளது: அது வட மொழிக்கடலில் ஆழ்ந்தவர்கட்கே ரஸிக்கக்கூடியது. அதைப்பற்றிப்பிறகு விரியவுரைப் போம்; இப்போது இங்கு நாம் நிரூபிக்கும் ஒற்றுமை சரித்திரப்போக்கில் ஸம்பந்தப்பட்ட தாகும். கேண்மின்;—

(கண்ணனுக்கும் ஸ்ரீராமாநுஜர்க்கும் 16 வகையான ஒற்றுமைகள்.)

18. கண்ணபிரான் திருவவதாரஞ் செய்த இடம் சிறைக் கூடம் என்பது உலக மறிந்தது. ஸ்ரீராமாநுஜர் அவதரித்த இடமும் சிறைக்கூடமே. எப்படியெனில்; * அமர ரோடு உயர்விற் சென்று அறுவர்தம் பிறவி யஞ்சிறையே * [திருவாய்மொழி 1—3—11] என்ற நம்மாழ்வார் திருவாக்கின்படி இந்த ஸம்ஸார மண்டலமே ஒரு சிறைக்கூடமன்றோ. இஃது * இருள்தருமா ஞாலமாதலால் இருள் மலிந்த விடத்தே வந்து பிறந்தார் உடையவர். கண்ணனும் * இருள் நாள் பிறந்த வம்மான் * என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தின்படி யும் * வேண்டித்தேவரிரக்க—வீங்கிருள்வாய் வந்து பிறந்ததும் * என்ற நம்மாழ்வார் பாசுரத் தின்படியும் இருள்மலிந்த போழ்தன்றோ வந்து பிறந்தது.

19. கண்ணபிரான் அவதரித்தபோது * ஜாதோஸி தேவதேவேச சங்கசக்ரகதாதர ! * என்கிறபடியே சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையனாகவே சுடர்விளக்கத்தோடு திருவவ தரித்தான். ஸ்வாமி அவதரிக்கும்போதும் நம்போலியரைப்போலே அழுதல் அரற்றுதல் செய்யாதே மிக்க ஞான வெள்ளச் சுடர் விளக்கத்தையே காட்டிக்கொண்டு அனைவரும் வியப்புறுமாறு அவதரித்தார். கண்ணபிரான் பிறந்த விடம் ஒன்று; இளமையில் வளர்ந்த விடம் வேறொன்று; பிறகு வளர்ந்தவிடம் மற்றொன்று. (அதாவது) வடமதுரையிலே பிறந்தது; திருவாய்ப்பாடியிலே இளமையில் வளர்ந்தது; பிறகு முதுமையில் த்வாரகை முதலான விடங்களில் வளர்ந்தது. ஆசாரியரும் பிறந்தது ஸ்ரீபெரும்பூதூரில்; இளமையில் வளர்ந்தது காஞ்சீபுரியில்; பிறகு வளர்ந்தது ஸ்ரீரங்கம், திருநாராயணபுரம் முதலான விடங் களில். [மற்றொரு வகையுமுண்டு;] " திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து " என்கிற நம்முன்னோர்களின் முதுமொழியின்படியே திருவஷ்டாக்ஷர மஹா மந்திரத்தினால் ஸ்வரூபவுணர்ச்சி பெறுதலாகிற பிறவியைப்பெற்று, த்வயம் என்கிற மந்த்ரரத்னத்தின் அநு ஸந்தானத்தையும் அதன்படி அநுட்டானத்தையுமே செல்வவாழ்ச்சியாகக் கொண்டிருப்பவ ரென்க. பிறக்குமிடம் திருமந்த்ரம்; வளருமிடம் த்வயம்—ஆகையாலே இதனால் கண்ண னோடு ஒப்புமை.

20. கண்ணபிரான் பிறந்த வயிற்றில் இவனொருவனே பிறக்கவில்லை; * மக்களறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில், சிக்கன வந்து பிறந்து நின்றாய் * [பெரியாழ்வார் திருமொழி 5-3-1.] என்கிறபடியே மற்றும் பல மக்கள் பிறந்தாருண்டு; ஆனால் அந்தப் பிள்ளைகளினால் உலகுக்கு யாதொரு உதவியும் நேர்ந்ததில்லை; அவர்கள் பிறந்ததும் இறந்ததுமே தெரியவருகின்றது. இதுபோல, எம்பெருமானார் திருவவதரித்த இவ்வுலகத்தில் மற்றும் பலபேர்களும் ஒக்கப்பிறக்கின்றார்களெனினும் அவர்களால் உலகுக்கொரு நன்மையுமில்லையாயிற்று. அவர்களின் பிறப்பும் இறப்புமேதான் உலகுக்குத்தெரியும்.

21. கண்ணபிரான் வடமதுரையில் நின்றும் திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளும்போது "வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ" என்னும்படி பேராழமான பெருவெள்ளமும் முழந்தாளளவாக வற்றிப்போயிற்றென்று தெரியவருகிறது. அதுபோல, ஆசாரியர் சிறிது ஸஞ்சரிக்கத் தொடங்கும்போதே "பிறவியென்னுங் கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால்" என்ற பெரியாழ்வார் திருவாக்கின்படியே ஸம்ஸாரமாகிற பெருங் கடலும் வற்றத் தொடங்கிற்றென்க.

22. பராத்பரனான பெருமான் தனது பெருமைகளை யெல்லாம் மறைத்து அடக்கிக்கொண்டு நீறு பூத்த நெருப்புப்போலேயாகி இடக்கை வலக்கை யறியாத ஆயர்களோடே கலந்து பழகினான்; அதுபோல எம்பெருமானாரும் மிகுஞானச் சிறுகுழவியாய்த் தமது ஞானசக்திப்பெருமைகளையெல்லாம் மறைத்துக்கொண்டு அறிவிலா மனிசரோடே கலந்து பழகியிருந்தனர். கண்ணன் இடையர்களோடு மாத்திரம் கலந்து பழகி யிருந்தானல்லன்; தன்னை வதைக்க வழிபார்த்திருந்த ஆஸுரப்ரக்ருதிகளோடும் கலந்திருந்து காலங் கழித்தனன். எம்பெருமானாரும் தம்மை மாய்க்கவெண்ணின யாதவப்ரகாசர்போல்வாரிடத்திலும் கலந்திருந்து காலங்கழித்ததுண்டே.

23. வளர்ந்தருளுமிடத்தில் தீயபுந்திக் கஞ்சனால் ஏவப்பட்ட பூதனை தாய்வேஷம் பூண்டுவந்து நஞ்சு தீற்றிய முலையை உண்ணக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல முயன்று தானே முடிந்துபோனாள். இந்தப் பூதனையின் வரலாற்றைப் பேசுகின்ற தேசிகர் யாதவாப்யுதயத்தில் * கம்ஸப்ரயுக்தா கில காபி மாயா * என்று மாயை யென்கிற சொல்லால் கூறினர். மாயை யென்று மூலப்ரக்ருதிக்குப்பெயர். அது உண்மையில் விஷம்போன்றதாயிருக்கச் செய்தேயும் தன்னிடத்தில் போக்யதா புத்தியை யுண்டுபண்ணிக்கொண்டு தன் பக்கலிலே யீடுபடுத்தி நம்போல்வாரை முடிக்கப்பார்க்கிறது. இப்படியே ஆசாரியரையும் முடிக்கப் பார்க்கையில் அவரை முடிக்கமாட்டாமல் அவரது அளவற்ற பெருமையினால் தானே முடிந்து நின்றது.

24. * கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி * [திருப்பாவை—6] என்றபடி அஸுராவேசம் பெற்றவொரு சகடத்தைக் கண்ணன் திருவடிஸ்பர்சத்தால் நொறுக்கி முறித்து முடித்தனன் என்பது ப்ரஸித்தம். எம்பெருமானாரும் தமது திருவடி ஸ்பர்சத்தினால் சகடபங்கஞ் செய்தவரே. (எப்படியென்னில்) ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகும் ஸாதனம் சகடமெனப்படுவது. இங்கிருந்து நாம் அப்பால் செல்லப் பல வழிகளுண்டு; நரகம் சுவர்க்கம் முதலானவற்றின் வழிகளிற் கொண்டு செல்லுவது கள்ளச் சகடமாகும்; ஆசாரியருடைய திருவடி ஸம்பந்தத்தினால் அது தொலைந் தொழிந்ததேயாம். அர்ச்சிராதி மார்க்கமாகிய நல்வழியிற் செல்லும் ஸாதனமே மேம்பட்டுத் தீயவழிகளில் செல்லும் ஸாதனம் சிதைந் தொழிந்ததென்க.

25. கயிற்றினல் கட்டி ஒருரலிலே பிணித்துவிடப்பெற்ற கண்ணன் அவ்வுரலையு மிழுத்துக்கொண்டு தவழ்ந்து இரட்டை மருத மரங்களின் நடுவே யெழுந்தருளியபொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினலே அந்த இரட்டை மரங்களிரண்டும் முறிந்து விழுந்தனவாக யமளார்ஜுன பங்க விருத்தாந்தமுள்ளது. இணைபிரியாதே நின்ற இரட்டை மருத மரங்கள்போல இணைபிரியாது நின்று நம்மை நலியுமவை பலவுண்டு; பகவத் கீதையில் நான்காவது அத்யாயத்தில் * த்வந்த்வாதீதோ விமத்ஸர: * என்றும், ஏழாவது அத்தியாயத்தில் * த்வந்த்வமோஹேந பாரத * என்றும், பதினைந்தாமத்யாயத்தில்* த்வந்த்வைர் விமுக்தாஸ் ஸுக துஃக்கஸம்ஜ்ஞை: * என்றும் இப்படிப் பலவிடங்களில் த்வந்துவம் (இரட்டை) என்று பல சொல்லப்பட்டுள்ளன; இன்பு துன்பு, அஹங்கார மமகாரம், காம க்ரோதம், புண்ணிய பாபம்....என்னு மிவையெல்லாம் இரட்டைகளாம். இவையெல்லாம் எம்பெருமானர் திருவடி ஸம்பந்தம்பெற்ற வளவிலே இற்றொழிந்தனவென்க.

26. * வையமேழுங் கண்டாள் பிள்ளைவாயுளே * என்றும் * வாயுள் வையகங் கண்ட மட நல்லார் * என்றும் சொல்லுகிறபடியே கண்ணபிரான் தனது திருவாயில் ஏழுலகங்களையும் அன்பர்களுக்குக் காட்டினன். அதுபோல எம்பெருமானரும் 1. ச்ருதிகள் 2. ஸ்மிருதிகள், 3. இதிஹாஸங்கள், 4. புராணங்கள், 5. பாஞ்சராத்ரங்கள், 6. ஆழ்வாரருளிச்செயல்கள், 7. ஆசார்ய திவ்யஸூக்திகள் ஆகிய ஏழையும் தமது திருவாக்கில் அன்பர்கட்குக் காட்டினர்.

27. யமுனையாற்றில் ஓர் மடுவில் இருந்துகொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்னியினல் கொதிப்படைந்த நீருள்ளதாக்கிப் பெருங்கேடு விளைத்த காளியனென்னுங் கொடிய நாகத்தைக் கண்ணபிரான் கொழுப்படக்கினன். இவ்வரலாற்றை யாதவாப்யுதய காவியத்தில் தேசிகர் கூறுமிடத்து (4–125) ஸ்ரீராமாநுஜர் செய்தருளின செயலையே உவமையாகக் காட்டியருளினர். ஐந்தலைவாய் நாகமாகிய காளியன் யமுனையாற்றைக் கலக்கிக் கெடுத்தது—விஷவாக்குக்களான புறமதத்தவர்கள் மனம்போனபடியெல்லாம் கூறும் தவறன பொருள்களாலே வேதங்களைக் கெடுத்தபடியாம். அந்தக் கெடுதியைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை எல்லாரும் இனிமையாகப் பருகும்படி செய்தது—ஸ்வாமி தவறன பொருள்களை நீக்கி நல்ல பொருள்களை வெளியிட்டு வேதத்தை ஸத்துக்களுக்கு உபஜீவ்யமாக ஆக்கின படியாம். யமுனையின் ஸ்தானத்தில் வேதம்; காளியன் ஸ்தானத்தில் குதர்க்கவாதிகள்; கண்ணன் ஸ்தானத்தில் ஆசாரியர். * தூயபெருநீர் யமுனைத் துறைவனை * என்னும்படி யமுனையாறு இடையருத பகவத் ஸம்பந்தத்தை யுடையதாயிருந்தது போல வேதமும் பகவத் ஸம்பந்தத்தை நியதமாக வுடைத்தாயிருக்குமிறே.

28. காளியன் ஐந்து தலைகளாலும் நஞ்சை யுமிழ்ந்து நாசம் விளைவித்ததுபோல புறமதத்தவர்கள், ஐந்துவிதமான துர்வாதங்களாலே நாசத்தை விளைவிக்கின்றனர்; (எப்படியென்னில்) 1. ஈச்வரனே யில்லையென்னுதல், 2 ஈச்வரன் உண்டெனினும் அவன் அனுமானத்தால் ஸித்திப்பவனேயன்றி சாஸ்திரத்தால் ஸித்திப்பவனல்லன் என்னுதல்; 3 சாஸ்திரங்களைக்கொண்டே ஈச்வரனை யங்கீரித்தும் அவனுக்குக் குணங்களும் விக்ரஹமும் இல்லையென்னுதல்; 4 ஈச்வரன் ஒருவனே யென்பதில்லை, பல ஈச்வரர்கள் உண்டென்னுதல், 5. பிரபஞ்சமேயில்லை—ஸர்வம் சூன்யம் என்னுதல் ஆக இப்படிப்பட்ட ஐகையான அபார்த்தங்களினல் புறமதத்தவர்கள் வேதங்களைக்கெடுக்க, அந்தக் கெடுதல்களை எம்பெருமானர் போக்கியருளினர், காளியன் தலையிலே கண்ணபிரான் அடியிட்டு நடனம் புரிந்தாப்போலே

* நாவலிட்டுழிதருகின்றோம் நமன் தமர் தலைகண்மீதே * (திருமாலை—1) என்ற கணக்கிலே கூத்தாடப் பெறுதலுங்காண்க.

29. குதிரை வடிவங்கொண்டு மஹாபயங்கரனாகவந்த கேசி யென்னு மஸுரனைக் கண்ணபிரான் தொலைத்தருளினன்; அதுபோல நம்பேராசிரியர் *இந்த்ரியாணி ஹயாநாஹு:* என்ற உபநிஷத்தின்படியே குதிரைகளாகச் சொல்லப்பட்ட இந்திரியங்களின் வலியை யடக்கி ஜிதேந்த்ரியராய் * காமாதிதோஷஹர மாத்மபதாச்ரிதாநாம் * என்றும் *மதநகதநைர் ந க்லிச்யந்தே யதீச்வரஸம்ச்ரயா:* என்றும் சொல்லும்படி வாழ்ந்தவர்.

30. கம்ஸனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஓரசுரன் விளாமரத்தின் வடிவமாய், தன் கீழே கண்ணன் வரும்போது மேல்விழுந்து கொல்வதாக எண்ணிவந்து நிற்கவும், மற்றோ ரசுரன் கண்ணனை முட்டிக் கொல்லும்பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு நிற்கவும் இவற்றையறிந்த கண்ணபிரான் "விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே" "கன்றுகொண்டு விளங்கனியெறிந்து" என்கிறபடியே கன்றைச்சுழற்றி விளவின்மீதெறிந்து இரண்டையும் ஒருசேரமுடித்தருளினன் என்ற வரலாறு முள்ளைக்கொண்டே முள்ளைக் களைகின்றபடியைக் காட்டுகின்றது. இதுபோலவே ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யகாரர் புறமதங்களைக் கண்டிக்கு மிடத்து அவை பரஸ்பரவ்யாஹதங்களாயிருக்கும்படியை நன்கு நிரூபித்துக்காட்டி அவை களைக்கொண்டே அவற்றை மறுத்தொழிப்பவர்.

31. இடையர்கள் வழக்கப்படி இந்திரனுக்குப் பூஜைசெய்யப் பற்பல வண்டிகளால் சோறும், தயிரும், நெய்யும், காய்கறிகளும் சேகரிப்பதைக்கண்டு கண்ணன் அப்பூசனையனைத் தையும் கோவர்த்தனமலைக்கே இடும்படி கட்டளையிட்டுத் தானே ஒரு தேவதா ரூபங் கொண்டு அவற்றை முற்றும் அமுதுசெய்தருள, இந்திரன் பசிக்கோபத்தினால் மேகங்களை ஏவிக் கடூரமான கல்மழையை ஏழுநாள் பெய்விக்க, அதனால் யார்க்கும் யாதொரு தீங்கும் நேரிடாதபடி கண்ணன் அம்மலையையே குடையாக வெடுத்துப்பிடித்து நின்றனன் என்பது ப்ரஸித்தமான கதை: தேவதாந்தரத்திற்கு வழிபாடு செய்வதைப் பொறாத தன்மையும் அந்த வழிபாடுகளையெல்லாம் தானே ஏற்றுக்கொள்ளுந்தன்மையும், அதனால் எதிரி என்ன தீங்கு செய்ய நினைத்தாலும் அதற்குப் பிரதியாகத் தீங்கிழைக்க நினையாத பெருந்தகவும், தன்னையடுத்தவர்களைத் தான் ரக்ஷித்துக்கொண்டு நிற்றலுமாகிய விஷயங்கள் இவ்விதிஹாஸத் தில் கிடைக்கின்றன. *மறந்தும் புறந்தொழாமாந்தர்* என்றிருக்குமாசிரியர் தேவதாந்தர பஜனத்தைச் சிறிதும் ஸஹியார். "திருவில்லாத் தேவரைத் தேறேல்மின் தேவு" என்று துணிந்து உபதேசிப்பர். * ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத் தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா* என்றும் *பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து* என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானே ஆசாரியனாக வந்து பிறந்ததனால் ஆராதனைகளெல்லாம் ஆசார்யனுக்கே சேரும். "குற்றஞ்செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்" [ஸ்ரீவசனபூஷணம் 305] என்றிருப்பவர் ஆசார்யராகையாலே தீங்கிழைப்பார் திறத்திலும் பிரதியாகத் தீங்கிழைக்க நினையார். பெருமழையில் நின்றும் கண்ணன் காத்தருளினதுபோல * அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்ததது:க்கவர்ஷிணி பவதுர்த்திநே * [ஸ்தோத்ரரத்னம் 49] என்னப்பட்ட பெருமழையில் நின்றும் (அதாவது, ஸம்ஸாரத் துயர்ப் பெருமழையினின்றும்) காத்தருளி னர். கண்ணன் ஏழுநாள் காத்தனன். ஆசிரியர் காப்பது ஏழேழ் பிறவிக்கும்.

32. கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக, அவளது தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி அஸுராவேசம்பெற்ற ஏழு எருதுகளை வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்துகொண்டனன், நம்பரமாசார்யர் "எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம் போலே திருமந்த்ரம்" [முமுக்ஷுப்படி 113] என்கிறபடியே திருமந்த்ரமாகிற திருமங்கலியத்தை சேதநர்களுக்குக் கட்டி விவாஹம் நடத்துகைக்கு அங்கமாக, காமம், குரோதம், லோபம், மோஹம் மதம் மாத்ஸர்யம் அஸூயை என்கிற ஏழு விரோதிகளையும் தொலைத்தருளினர்.

33. கண்ணன் இரண்டு மல்லர்களை மடித்ததுபோல ஆசிரியர் * நீர்நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து * என்கிறபடியே அஹங்கார மமகாரங்களை அடியறுத்தவர். கண்ணன் குவலயா பீடமென்கிற மதயானையை முடித்தாப்போலே "மதக்களிறைந்தினையும் சேரி திரியாமல் செந்நிறீஇ" என்கிற பொய்கையார் பாசுரத்தின்படியே மதகளிறாகிய இந்திரியத்தின் துஷ்டத்தன்மையைத் தொலைத்தவர். கண்ணன் மாலாகாரர் திருமாளிகைக் கெழுந்தருளி அவர் தந்த பூவைப்பெற்று உகந்ததுபோல நம் ஆசிரியர் * அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ:,ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:. ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவச, ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத் * என்னப்பட்ட எண்பகர் பூவையும் சிஷ்யர்கள்பக்கலிலே செழித்து வளரக் காணப்பெற்றுக் களித்தவர்.

34. கண்ணபிரான் கம்ஸ சிசுபால கௌரவ ப்ரப்ருதிகளை முடித்துப் பஞ்ச பாண்டவாதிகளை வாழ்வித்ததுபோல நம் பரமாசார்யர் * தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறையும் நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனரென்னும்படியாக *நாட்டிய நீசச் சமயங்களை மாள்வித்து அர்த்த பஞ்சகம் முதலிய விசேஷார்த்தங்களை எங்கும் விளங்கச்செய்தனர். இங்ஙனே மற்றும் பலவும் காண்க.

35. மணவாளமாமுனிகள் யதிராஜவிம்சதியில் இரண்டாவது ச்லோகத்தில் எம்பெருமானாரை ஹம்ஸமாகவும் வண்டாகவும் அருளிச்செய்துள்ளார். * ஸ்ரீரங்கராஜசரணாம்புஜராஜஹம்ஸம் என்றும் *ஸ்ரீமத்பராங்குசபதாம்புஜப்ருங்கராஜம் என்றும். (அதாவது) ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாமரைகளிலே ராஜஹம்ஸமாயிருப்பவர்; நம்மாழ்வாருடைய திருவடித்தாமரைகளிலே சிறந்த வண்டாக இருப்பவர் என்று கூறியவாறு. எம்பெருமானார் *தென்னத்தியூரர் கழலிணைக்கீழ் ப் பூண்டவன்பாளன்* [இராமாநுச நூற்றந்தாதி—31] என்கிறபடியே தேவப் பெருமாள் திருவடிவாரத்திலே பேரன்பு பூண்டவராயிருந்தும் ஸ்ரீரங்கநாதனால் விசேஷகடாக்ஷம் செ தருளப்பெற்றுத் தென் திருவரங்கம் சென்று சேர்ந்து *யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ* இவ்வுடல் விழுந்தனையும் இந்தத் திருவரங்கம்பெரிய கோயிலிலேயே இனித வாழக்கடவீர்—சரணாகதிகத்யம்-19.] என்று திருவரங்கச் செல்வனால் அநுக்ரஹிக்கப்ப ட்டு அப்பெருமானுடைய திருவடிவாரத்தின் கீழேயே இனிது வாழ்ந்தபடியினால் ஸ்ரீரங்க ராஜ சரணாம்புஜ ராஜஹம்ஸம் என்றருளிச் செய்யலாயிற்று. இனி ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜ ப்ருங்கராஜம் என்ற விசேஷணத்தினால்—ஸ்வாமி நம்மாழ்வாரது திருவடித்தாமரைகளிலே வ டுபோல் படிந்திருப்பவரென்றது.

36. ஆகவிப்படி ஸ்வாமியை ஹம்ஸமாகவும் வண்டாகவும் கூறினதிலிருந்து தேறுகின்ற ஸ்வாமியினது சில பெருமைகளை ஸ்வாபதேசார்த்தாநுபவப்ரணாளியாலே வெளியிடுகிறோமிங்கு. ஆழ்வார்கள் தமது திவ்யப்ரபந்தங்களிலே அன்னங்களையும் வண்டுகளையும் தூது விடுவதாக அருளிச்செய்வதுண்டே; அங்கு எம்பெருமானார் போல்வாரான மஹாசார்யர்களையே தூது விடுவதாக உள்ளுறை பொருளாகையாலே அதைத்திருவுள்ளம்பற்றி ஸ்வாமியையிங்கு அன்னமாகவும் வண்டாகவுமருளிச் செய்வது மிகப்பொருத்தம். அன்னத்தின் படிகளும் வண்டின் படிகளும் ஸ்வாமி பக்கலிலே நிரூபிக்கப்படுகிறபடியைக் காணீர்;—

37. ஹம்ஸத்திற்குள்ள தன்மைகள் ஸ்வாமி பக்கலிலே குறையற்றிருக்கின்றன. எங்ஙனே யென்னில்; (1) நீரையும் பாலையும் கலந்துவைத்தால் அவற்றைப் பிரிக்கவல்லமையுடையது ஹம்ஸம் என்று பிரமாணங்களிலறிகின்றோம்; *ஹம்ஸோ யதா க்ஷீரமிவ அம்புமிச்ரம்* என்பது முதலான வசநங்கள் காண்க. இதனால் ஹம்ஸமானது ஸாராஸாரவிவேகத்தில் மிகுந்த வல்லமையுடையது என்பது தேறும். ஸ்வாமி தாமும் * அஸாரமல்பஸாரஞ்ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே * என்றபடி ஸாராஸாரமிச்ரமாயிருந்த சாஸ்திரங்களிலே அஸாரமாயும் அல்பஸாரமாயுமுள்ளவற்றை யெடுத்துத்தள்ளி மிகவும் ஸாரமானவற்றையே கைக்கொண்டவர். பாஹ்யமதங்களையும் குத்ருஷ்டி மதங்களையும் நிரஸித்து ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய உபயவேதாந்தப்ரவர்த்தக ப்ரவீணராயெழுந்தருளியிருந்து ரஹஸ்யார்த்தங்களில் பஹிரங்கமான அர்த்தங்களைத் தள்ளி அந்தரங்கமான அர்த்தங்களைக் கொண்டருளினர் என்பது இங்கு விவக்ஷிதம்.

38. அப்படிப்பட்ட அர்த்தங்களில் ஒன்று இங்கு எடுத்துக்காட்டுவோம்;—திருவாய்மொழி வியாக்கியானத்தில் பல விடங்களில் எம்பெருமானாருடைய நிர்வாஹமென்று விலக்ஷணமான அர்த்தங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கேண்மின்; *உயர்வறவுயர்நலம்* என்கிற முதற்பாட்டினீற்றடியில் துயரறுசுடரடி என்றுள்ளவிடத்திற்கு "அடியார்களுடைய துக்கங்களையெல்லாம் அறுக்கிற [அதாவது போக்கடிக்கிற] திருவடி" என்று எம்பெருமானார்க்கு முன்புள்ள ஆசாரியர்கள் அருளிச் செய்தார்களாகவும், எம்பெருமானார் அப்படி யன்றிக்கே [அதாவது, துயரறுக்குஞ் சுடரடி யென்று கொள்ளாமல்] 'துயரறுஞ் சுடரடி' என்றுகொண்டு தனக்குண்டான துயரைத் தான் தவிர்த்துக்கொள்ளுந் திருவடியென்று பொருளருளிச் செய்ததாகவும் வியாக்கியானமுள்ளது. பூருவர்கள் பணித்த அர்த்தத்திற்காட்டிலும் ஸ்வாமிபணித்த அர்த்தத்தில் என்ன சிறப்பு என்பதை ஆராய்ந்து அறியவேணும். எம்பெருமான் அடியார்கள் படுந்துயரைத் தீர்க்கிறானென்பது இதிஹாஸ புராணாதிகளில் தேறின அர்த்தமே; அது மறுக்கத்தக்கதன்று. எம்பெருமானார் அதைத் தள்ளி வேறு பொருள் பணித்ததானது அப்பொருள் அஸம்பத்தம் என்கிற திருவுள்ளத்தினாலன்று; அதிற்காட்டிலும் மிகுந்த ஸ்வாரஸ்யம்பெற்று நெஞ்சை யுருக்கும்படியான அர்த்தம் இது என்பதே ஸ்வாமியின் திருவுள்ளம். அடியவர்கள் துயருறுங்காலத்தில் எம்பெருமான் தானும் துயருற்றிருப்பதாக இதிஹாஸங்களினாலறிகின்றோம். துயருறுவது என்பது ஹேயகுணமாயிற்றே; ஸமஸ்த கல்யாண குணாத்மகனான எம்பெருமானிடத்தில் இந்த ஹேயகுணமிருப்பதாக இசையலாமோ வென்று சங்கிப்பாருடைய சங்கையைப் போக்கிக்கொண்டே வால்மீகி பகவான் ஸ்ரீராமாயணத்தில் அயோத்யாகாண்டத்தில் நகரத்து ஜனங்கள் இராமனுடைய திருக்குணங்களைப்புகழ்ந்து கூறுவதாக இட்ட ஸந்தர்ப்பத்தில் * பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே * என்று திருக்கல்யாண குணங்களையே தாங்கள் தசரத சக்ரவர்த்தியிடம் எடுத்துக் கூறப்போவதாக ப்ரதிஜ்ஞை செய்வதை முன்னம் காட்டிவிட்டு,

மேலே *வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம்பவதிது:க்கித:* என்று [மனிதர்கள் துயருறுமிடத்து இராமபிரான் தான் மிகமிகத் துயரு வதாகச்] சொல்லி இதையொரு கல்யாண குணமாக நாட்டிவைத்தார். அடியார்கள் ப ந்துயரை அறுக்கின்றான் பகவான் என்பது இருக்கட்டும்: அவ்வடியார்கள் துயர் தீரும் வரையில் தானும் துயருற்றவனாகவேயிருந்து அவர்கள் துயரற்றபிறகே தானும் துயரற்றவ னாகுகை என்னுமிப்பொருள் பகவத்குணாநுபவரஸிகர்களுடைய நெஞ்சையுருக்குமாதலால் இச்சிறந்த பொருளை எம்பெருமானார் திருவுள்ளம்பற்றினாரென்க. இத்திருக்குணத்தை வ ால்மீகிபகவான் ஸ்ரீராமாயணத்தில் ஓரிடத்திலன்று, பலவிடங்களிலும் மூதலிக்கிறபடி கா ரீர்: *அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம், க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ * (ஸம்க்ஷேபரா-85.) என்ற ச்லோகத்தில் விஜ்வர: என்கிறபதம் உயிரானது; விபீஷணாழ்வான் துயர்தீர்ந்து முடிசூடும்வரையில் பெருமாள் தாம் துயருற்றிருந்ததாகவு அவனை முடிசூட்டியே தாம் துயர்தீரப்பெற்றதாகவும் நன்கு விளக்குகின்றதன்றோ விஜ் ர: என்னுமிப்பதம். இப்படிப்பட்ட ஸாரப்பொருள்களை விவேகித்து வெளியிடுவதனால் ஸ்வ மி ஹம்ஸமென்னத்தகுந்தவர்.

39. இன்னமும், சாந்தே க்ய உபநிஷத்தில் ஜானச்ருதியின் உபாக்யானமொன்று ஓதப்பட்டிராநின்றது. ஜாநச்ருதி யென்கிற க்ஷத்ரியன் மிக்க பெருஞ்செல்வம் படைத்தவனாகையாலே அன்னதானம் முதலி ன விசேஷமாகச் செய்து கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு ப்ரஹ்மஜ்ஞானமென் து சிறிது மில்லாமலிருந்து பல்ல பல்லாக்ஷ ரென்கிற இரண்டு மஹரிஷிகள் அவனிடத் லே இரக்கங்கொண்டு இவனுக்கு ப்ரஹ்மஜ்ஞானத்தை யுண்டாக்கவேணுமென்றெண்ணி இரண்டு ஹம்ஸரூபிகளாய் அவன்மேலே பறந்துகொண்டு போகையில் பல்ல னென்கிற ஹ ஸம் பல்லாக்ஷ னென்கிற ஹம்ஸத்தைப்பார்த்து 'ஜாநச்ருதிமஹாப்ரபுவின் மேலே நிழல் படாதபடி கவனித்துப்போ' என்று சொல்லிற்று. அது கேட்ட அந்த ஹம்ஸம், "இவன் மல் நிழல் பட்டாலென்ன? அதனாலென்ன கெடுதல்? இவன் ரைக்வரைப்போல் ப்ரஹ்ம ஜ்ஞானியா என்ன? ஞானஹீநனானவிவனை நாம் கௌரவிக்க வேணுமோ?" என்று அவஹேளன மாகச் சொல்லிற்று. அதைக்கேட்ட ஜாநச்ருதி தூக்கங் கொண்டவனாய் அந்த ரைக்வ ரைத்தேடிச்சென்று அநுவர்த்தித்து ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கவேணுமென்று பிரார் த்தித்து அவரிடத்தில் உபதேசம் பெற்றானென்பது அவ்வுபாக்கியானத்தின் ஸாரம். க்கதையின்படி ப்ரஹ்மஜ்ஞான ப்ராப்திக்கு ஹம்ஸம் ப்ரேரகமானதுபோல எம்பெரும னார் தாமும் அதற்கு ப்ரேரகர் என்பது அறியத்தக்கது. "பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று பேசி வரம்பறுத்தார்பின்" என்று உபதேச ரத்தினமாலையிலருளிச் செய்தபட ஸ்வாமி நியமனம் தந்தருளாவிடின் இவ்வுலகில் ப்ரஹ்மஜ்ஞானப்ரசாரத்திற்கு வழியேயில்லையாமன்றோ.

40. எம்பெருமான் வேதசாஸ்திரங்களை வெளியிடத் திருவுள்ளம்பற்றியபோது ஹம்ஸரூபத்தைப் பரிக்ரஹித்தருளினதாக சாஸ்த்ரங்களினாலறிகிறோம், *அன்னமாய் நூல் பயந்தான்* என்றும் *அன்னமதாயிருந்து அங்கு அறநூலுரைத்த* என்றும் ஆழ்வார்களு மருளிச் செய்கிறார்கள். சாஸ்த்ரோபதேசத்திற்கு ஹம்ஸமாயிருத்தல் அவசியமாயினபடியாலே சாஸ்த்ரங்களை யுபதேசித்தவர்களில் தலைவரான எம்பெருமானாரை ஹம்ஸமென்றது பொருத்தமே.

41. ஹம்ஸத்தினுடைய இயல்வைச் சொல்லுமவர்கள் *ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்தமாம்பஸி* என்கிறார்கள்; அதாவது ஹம்ஸம் ஒருகாலும் சேற்று நீரில் கால்

பொருந்தாதென்றபடி. அப்படியேயன்றோ எம்பெருமானார்படியும். திருவிருத்தத்தின் முடிவு பாசுரத்தில் "அழுந்தார் பிறப்பாம் பொல்லாவருவினை மாய வன்சேற்றள்ளல் பொய்ந் நிலத்தே" என்று இந்த ஸம்ஸாரநிலமே சேற்றுநிலமாகச் சொல்லப்பட்டுள்ளது; இதில் கால்பொருந்தாதவர்களில் தலைவராயிற்று எம்பெருமானார்,

42. திவ்ய தேசங்களை வருணிக்கும்போது ஆழ்வார்கள் அன்னம் மாதர்களின் நடையைப் பின்சென்று நடப்பதாகக் கூறுகிறார்கள்; * பெடையோடன்னம் பெய்வளையார்தம் பின்சென்று நடையோடியலி * என்று திருமங்கையாழ்வார் திருநறையூர்ப்பதிகமொன்றில் கூறியுள்ளது காண்க. ஸ்வாமி தாமும் * அன்னநடைய வணங்கான பிராட்டியினுடைய நடையைப் பின் செல்பவர். (அதாவது-) பிராட்டியின் நடையாவது நடத்தை; சேதனர்களைக்குறித்து எம்பெருமானிடத்தில் மன்றாடிப் பேறு பெறுவிப்பதே பிராட்டியினுடைய முக்கியமான நடத்தையாகும். அதை ஸ்வாமி தாமும் அநுஸரிக்கையாவது-தாமும் அப்படியே எம்பெருமானிடத்தில் மன்றாடி இன்றிருக்கும் நம்போல்வார்க்கும் பேறு பெறுவித்ததேயாம் இவ்விஷயத்தை ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ந்யாஸதிலகத்தில் * உக்த்யா தநஞ்ஜய விபீஷண லக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநேர் பவதா விதீர்ணம், ச்ருத்வாவரம் * என்றச்லோகத்தினாலும், மணவாளமாமுனிகள் யதிராஜ விம்சதியில் * காலத்ரயேபி........... க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ச்ரிதாநாம் * என்ற ச்லோகத்தினாலும் வெளியிட்டருளினார்கள். அவற்றின் வியாக்கியானங்களிலே விரியவுரைத்தோம், கண்டுகொள்வது. பொதுவாகவே ஆசார்யர்களின் புருஷகாரமில்லாமல் எம்பெருமான் பேறுதரமாட்டானென்பதை * தத்தேரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேச காங்க்ஷீ * (ந்யாஸதிலகே) என்ற ஸ்ரீஸூக்தியினால் கல்வெட்டாக வருளிச்செய்தார். எம்பெருமானார்க்கு இது விசேஷ நிரூபகமென்றுணர்க. இங்ஙனே மற்றும் பலவகையான பொருத்தங்களும் உய்த்துணர்க.

43. இனி "ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜ ப்ருங்கராஜம்" என்று வண்டாக அருளிச்செய்ததின் பொருத்தங்களை நிரூபிப்போம். வண்டு மதுவ்ரத மென்று பேர்பெற்றிருக்கும். தேன்தவிர வேறொன்றைக் கொள்ளாது என்றபடி. அதுபோல * உளங்கனிந்திருக்குமடியவர்தங்களுள்ளத்துளூறியதேன் * என்றும் * தேனை நன்பாலைக் கன்னலையமுதை * என்றும் * எனக்குத் தேனே, பாலே கன்னலே யமுதே * என்றும் பல விடங்களிலும் தேனாகச் சொல்லப்பட்ட எம்பெருமானையே விரும்பி மற்றொன்றைக் கண்ணெடுத்தும் பாராமல் பகவதனுபவத்தையே விரதமாகக் கொண்டிருந்தவர் எம்பெருமானார்.

44. * வண்டினங்கள் காமரங்களிசைபாடும் * என்று குலசேகராழ்வாரும், யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும் * என்று பெரியாழ்வாரும், * வரிவண்டுதேதெனவென்றிசைபாடும் * என்று திருமங்கையாழ்வாரும் இப்படி மற்றும் பலரும் பணித்தபடியே யாழிசைபோன்ற இசைகளைப் பாடுவதையே இயல்வாகவுடையதாயிருக்கும் வண்டு; ஸ்வாமிதாமும் * யாழினிசை வேதத்தியல் *பண்ணார் பாடலாயிரம்* என்னப்பட்ட திருவாய்மொழி முதலிய திவ்யப்பிரபந்தங்களின் கானத்தையே போதுபோக்காகவுடையராயிருந்தவர். "தமிழ் மறைகளாயிரமும் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" "பண்டருமாறன் பசுந்தமிழானந்தம் பாய்மதமாய் விண்டிட வெங்களிராமானுசமுனிவேழம்" என்றவைகாண்க.

45. வண்டு வடமொழியில் சஞ்சரீக மென்று பேர்பெற்றிருக்கும்; ஓரிடத்தில் தங்கியிராது; மதுவுள்ளவிடமெங்கும் பறந்து திரியுமது. அதுபோல் ஸ்வாமி தாமும் * ஸ்ரீரங்கம்

கரிசைலமஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலேள ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ் ச பதரீநாராயணம் நைமிசம், ஸ்ரீமத்த்வாரவதீ ப்ரயாக மதுராயோத்யா கயா புஷ்கரம் ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி: *என்கிறபடியே* பதியேபரவித்தொழுந்தொண்டர்களில் தலைவராயிருந் தார்.

46. வண்டு எந்த ஸமயத்தில் எங்குச் செல்லவேணுமென்று நினைத்தாலும் தட்டுத் தடங்கலின்றியே புகுந்து ரமிக்கும்; ஸன்னிதியில், கர்ப்பக்ருஹங்களினுள்ளும் எம்பெரு மான் திருமுடிமீதும் தாராளமாகப் புகக்காணுகின்றோம். அதுபோல, * பின்னிட்ட சடை யானும் பிரமனும்:இந்திரனும் துன்னிட்டுப் புகலரிய * என்னும்படி திருவாசல்களிலே ஸேவா பரரானவர்கள் நிறைந்து தலை நுழைக்கவொண்ணுதபடி நெருக்க, * மன்னிய தென்னரங் காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள் * என்னும்படியவதரித்தருளின எம்பெருமானர், கோயில் திருமலை பெருமாள்கோயில் முதலான எந்த திவ்யதேசங்களிலும் தடையும் சங்கையு மொன்று மின்றிக்கே அதிகாரச் செல்வத்துடனே உள்ளே புகுந்து ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்து வாழ்ந்தவர் காண்மின்.

47. வண்டு சோலைகளிலேயே சுழலமிடும்; எம்பெருமானர்தாமும் * ஆராமஞ் சூழ்ந்தவரங்கம் * சிந்து பூ மகிழுந்திருவேங்கடம் * விரையார்பொழில் வேங்கடம் * என் னும்படியாகச் சோலைகள்மிக்க தலங்களிலேயே சுழலமிட்டவர். இப்படி மற்றும் பல பொருத்தங்களும் காண்க.

48. நாடு நகரமும் நன்கறிய எங்கும் அநுஸந்திக்கப்பட்டு வருகின்ற ஆண்டாள் வாழித்திருநாமத்தில் “ பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானள் வாழியே ” என்றுள்ளது. இதனல் பெரியாழ்வார் திருமகளாரான சூடிக்கொடுத்த நாச்சியார் எம்பெருமானர்க்குத் திருத்தங்கையாரென்று தெரியவருகின்றது. பெரியாழ்வாருடைய காலத்திற்கும் எம்பெரு மானர் காலத்திற்கும் இடையே எவ்வளவோ காலவ்யவதாநமுள்ளதென்பதை உலகமறியும். ஆண்டாளுக்குப் பின் ஆயிரக்கணக்கான வருஷங்கள் கடந்தபிறகு அவதரித்தவரான எம்பெ ருமானர் அவ்வாண்டாளுக்குத் திருத்தமையனாக எப்படியாக முடியும்? என்கிற சங்கை ஸம்ப்ரதாய இதிஹாஸவிசேஷ மறியாதவர்களுக்குத் தோன்றக்கூடியது. அவ்விதிஹாஸ மறிந்தவர்களுக்கு இந்த சங்கை தோன்ற நியாயமில்லை. அவ்விதிஹாஸத்தை இங்குச் சுருக்க மாக வரைகின்றோம். எம்பெருமானர் திருவரங்கம் பெரியகோயிலில் உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபம் நிர்வஹித்தருளுகிற நாளிலே நாச்சியார் திருமொழி காலக்ஷேபம் நடவாநிற்க, அதில் * நாறு நறும் பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்கு நான், நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன், நூறு தடாநிறைந்த அக்கார வடிசில் சொன்னேன், ஏறு திருவுடையான் இன்று வந்திவை கொள்ளுங் கொலோ * [9—6.] என்கிற பாசுரத்தின் பொருளை விவரித்தருளுகையில் “திருமாலிருஞ் சோலையழகர்க்கு நூறு தடாநிறைந்த வெண் ணெயும் அக்காரவடிசிலும் ஸமர்ப்பிக்க ஆண்டாள் மநோரதித்துப் பாசுரம் பாடினள்; அதை நாம் அநுஷ்டாநபர்யவஸாயியாக நிறைவேற்றிவைப்போம்” என்று கோஷ்டியிலேயருளிச் செய்து உடனே ஸகல சிஷ்யர்களையும் கூட்டிக்கொண்டு மதுரைக் கெழுந்தருளி அங்கே ஸம்பாரங்களைச் சேகரித்துக் கொண்டு திருமாலிருஞ்சோலைக்கெழுந்தருளிப் பாசுரப்படியே நிறைவேற்றிவைத்து அழகருடைய பேரருளைப் பெற்று மகிழ்ந்து, அங்கு நின்றும் ஸ்ரீ வில்லி புத்தூரிலே ஆண்டாளையும் மங்களாசாஸனஞ் செய்துவருவதாகத் திருவுள்ளம்பற்றி அங் கேற வெழுந்தருளி ஸன்னிதிக்குள் செல்லுகையில் ஆண்டாள் ஆனந்தம் பூரித்து அர்ச்சாவ

தார ஸமாதியைக் கடந்து எதிர்கொண்டு வந்து "எம் அண்ணரோ நீர்" என்று சோதிவாய் திறந்தருளிச் செய்து ஆரத்தழுவியருளினுள். தான் மநோரதித்து வாசிகமாகச் சொல்லி வைத்ததை ஸ்வாமி ஸாக்ஷாத்தாக நிறைவேற்றிவைத்தபடியினுல், தங்கை மநோரதித்ததைத் தமையனுர் நிறைவேற்றிவைக்கிற கணக்கிலே யானதாகக் கொண்டு ஆண்டாள் இங்ஙனம் கூறியது மிகவும் பொருத்தமானது. அன்று முதலாக எம்பெருமானுர்க்கு அண்ணரென்கிற ப்ரஸித்தியும் ஆண்டாளுக்கு * பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னுனுளென்கிற ப்ரஸித்தியு முண்டாயிற்று.

49. ஸ்ரீமங்கிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த யதிராஜ ஸப்ததியில் முதல் ஒன்பது ச்லோகங்கள் குருபரம்பராநுபவத்தில் சென்றன. 1. பெரிய பெருமாள், 2. பெரிய பிராட்டியார், 3. ஸேனை முதலியார், 4. நம்மாழ்வார், 5. ஸ்ரீமந்நாதமுனிகள், 6. உய்யக்கொண்டார், 7. மணக்கால் நம்பி, 8. ஆளவந்தார், 9. பெரியநம்பி.— ஆக, இப்படி குருபரம்பராநுபவம் செய்து தலைக்கட்டிய பின் * ப்ரணமம் லக்ஷ்மணமுனி: * என்கிற ச்லோகம் முதலாக எம்பெருமானுருடைய குணுநுபவத்திலே இறங்கியுள்ளார். மேற்குறித்த ஆரம்ப ச்லோகத்தில் லக்ஷ்மணமுநி: என்று ஸ்வாமியின் திருநாமத்தை வ்யபதேசித்த படியினுல், ஸ்வாமிக்கு அமைந்த ராமாநுஜர் என்னுந் திருநாமம், தசரதாத்மஜனுன ஸ்ரீராமனுடைய தம்பியாகிய இளைய பெருமாளைக் குறிக்கொண்டதாமென்று விளக்கப்பட்டதாயிற்று. ராமாநுஜ னென்கிற திருநாமம், 'செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா!' என்னப்பட்ட நம்பிமூத்தபிரா னென்னும் பலராமனுடைய தம்பியான கண்ணனையும் சொல்லக்கடவ தென்பது முகுந்த மாலையில் *ஹேராமாநு ஹேஜ ஜகத்த்ரயகுரோ ஹேபுண்டரீகாக்ஷ* என்கிற ஸுப்ரஸித்தமான ச்லோகத்தினுல் அனைவரு மறிந்ததேயாம். ஆகவே ஸ்வாமிக்கு அமைந்த ராமாநுஜ ரென்னுந் திருநாமம் கண்ணபிரானைக் குறிக்கொண்டதாகவும் கொள்வதற்கு இடமிருப்பதால், கண்ணபிரானுக்கும் ஸ்ரீ ராமாநுஜர்க்கு முள்ள ஒற்றுமையை கீழே நாம் பதினுறு வகையாக விவரித்து நிரூபித்திருக்கின்றோம். அது, சரித்திரப்போக்கில் ஸ்வாபதேசார்த்த முறையில் நிரூபிக்கப்பட்ட ஸாம்யம். வேதாந்த தேசிகன் யதிராஜ ஸப்ததியில் சப்த ச்லேஷ வகையினுல் நிரூபித்தருளின ஸாம்யம் ஈண்டு விவரிக்கப்படுகிறது. (அந்த ச்லோகம் வருமாறு:—)

50. "சமிதோதய சங்கராதி கர்வ: ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச: ।
அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய: ॥"

இந்த ச்லோகத்தில் மூன்று வகைகளினுல் கண்ணபிரானுக்கும் எம்பெருமானுர்க்கும் ஸாம்யம், வடமொழி வல்லுநர்க்கு மிகவும் ரஸிக்கக்கூடிய ச்லேஷாலங்கார மர்யாதையினுல் [சிலேடை யணியில்] அருளிச்செய்யப்பட்டுள்ளது. பல பொருள்படச் சொல்லுவது ச்லேஷம் [சிலேடை] எனப்படும். அது அபங்க ச்லேஷ மென்றும் ஸபங்க ச்லேஷமென்றும் இருவகைப்படும். பதங்களை யொடித்துப் பொருள்கொள்ளவேண்டாமல் நாநார்த்த பதங்களையிட்டுப் பல பொருள்களைப் பெறுவிப்பதானது அபங்க ச்லேஷ மெனப்படும். அப்படியல்லாமல், பதங்களை யொடித்துப் பல பொருள்கொள்ளுமாறு ப்ரயோகம் செய்வதானது ஸபங்க ச்லேஷ மெனப்படும். இப்போது நாமெடுத்துக்கொண்ட * சமிதோதய * என்னும் யதிராஜ ஸப்ததி ச்லோக ரத்நத்தில் முதலிரண்டு பாதங்களில் அபங்க ச்லேஷம்; மூன்ருவது பாதத்தில் மாத்திரம் ஸபங்க ச்லேஷம்.

இனி, ச்லோகத்தின் கருத்து விவரிக்கப்படுகிறது.

51. [1. சமிதோதய சங்கராதி கர்வ:] இது கண்ணனுக்கும் உடையவர்க்கும் பொதுவான விசேஷணம். 'சங்கரன் முதலானாருடைய செருக்கை யடக்கினவர்' என்பது இதன் பொருள். கண்ணபிரான்பரமாகப் பொருள் கொள்ளும்போது சங்கரன் என்பதற்குச் சிவபிரா னென்று அர்த்தம். ஆதிபதத்தினால் அப்பிரானைச்சேர்ந்த கார்த்திகையான் கரிமுகத்தான் முதலானாரை [ஸுப்ரஹ்மண்ய விநாயகாதிகளைக்] கொள்வது. கண்ணபிரான் பாணாஸுர யுத்தத்தில் சங்கரன் முதலானாருடைய செருக்கை யடக்கினது இதிஹாஸ புராண ப்ரஸித்தம். உடையவர் * சங்கர பாக்கர யாதவபாட்ட ப்ரபர்கரர் தங்கள் மதஞ் சாய்வுற * என்றும் * கா சங்கா சங்கராதே: * என்றும் சொல்லுகிறபடியே, சங்கரகுரு ப்ரப்ருதிகளான புறமதத்தவர்களின் செருக்கைப் போக்கினவர் என்பது சரித்ர ப்ரஸித்தம். ஆகவே இந்த விசேஷணம் கண்ணனுக்கும் உடையவர்க்கும் ஸாம்யத்தை நிரூபித்ததாயிற்று. கண்ணபிரான் சங்கராதிகளின் செருக்கை யடக்கின வரலாறு இங்குச் சுருங்க எழுதப்படுகின்றது. பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்த பாணாஸுர னென்பான் ஒருகால் நடராஜனான சிவ பெருமானுடைய நடனத்திற்குப் பொருத்தமாகத் தாளம் போட்டனன்; அதனால் மிக்க மகிழ்ச்சிகொண்ட சிவபெருமான் அந்த ஸந்தோஷாதிசயத்தினால் அந்த பாணாஸுரனுக்கு ஆயிரங் கைகளை வரப்ரஸாதமாகத் தந்து, தானும் தன் பரிவாரங்களும் அவனது பட்டணத்தைக் காவல் செய்துகொண்டிருக்கும்படியான அநுக்ரஹமும் செய்தருளினன். அந்தப் பாணாஸுரனுக்கு உஷையென்று ஒரு மகள் இருந்தாள். அவள் ஒரு நாள் ஒரு பரமஸுந்தரனை புருஷனோடு தான் கூடியிருந்ததாகக் கனாக் கண்டு, தன் உயிர்த்தோழியான சித்ரலேகைக்கு அச் செய்தியைத் தெரிவித்தாள். அவள் உலகிலுள்ள பல ஸுந்தர புருஷர்களின் வடிவங்களைச் சித்திரத்தில் எழுதிக் காட்ட, க்ருஷ்ணனுடைய பௌத்ரனும் ப்ரத்யும்நனது புத்ரனுமாகிய அநிருத்தனே தன்னோடு கூடியிருந்தனனாக உஷை சுட்டிக்காட்டி, அவனைப்பெறுவதற்கு உபாயஞ் செய்யவேண்டுமென்று அத்தோழியை வேண்டினாள். அவள் தன் யோகவித்தை மஹிமையினால் த்வாரகைக்குச்சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டு வந்து அந்தப்புரத்திலே விட, உஷை அவனோடு போகங்களை யநுபவித்து வந்தாள். இச் செய்தியைக் காவலாளரா லறிந்த அந்தப் பாணன் தன் சேனையுடன் அநிருத்தனை யெதிர்த்து மாயையினால் பொருது நாகாஸ்த்ரத்தினால் கட்டிப் போட்டிருந்தான். த்வாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்க ளெல்லாருங் கலங்கி யிருந்தபோது, நாரத முனிவனால் செய்தி யுணரப்பெற்ற ஸ்ரீ க்ருஷ்ண பகவான், கருடாரூடனாய்ப் பலராமன் முதலானாரோடு கூட பாணபுரமாகிய சோணிதபுரத்திற் கெழுந்தருளும்போதே, அங்கு அருகில் காவல் காத்துக்கொண்டிருந்த சிவபிரானது ப்ரமத கணங்கள் எதிர்த்துவர, அவர்களை யெல்லா மழித்து, பின்பு சிவபெருமானா லேவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளு முள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும் பொருட்டுப் போர்புரிய, அதனையும் துரத்தி, பாணாஸுரனது கோட்டையைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்த சிவபிரானது அநுசரர்களான அக்நிதேவர்கள் ஐவரையும் நாசஞ்செய்து, பாணாஸுரனோடு போர் செய்யத் தொடங்குகையில், அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரஹ்மண்யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போராட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்த்ரத்தை ப்ரயோகித்துச் சிவன் ஒன்றுஞ் செய்யமாட்டாமல் கொட்டாவி விட்டுக்கொண்டு சோர்வடைந்து போம்படி செய்து, ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் ஹுங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர் சக்ராயுதத்தை யெடுத்து ப்ரயோகித்து அப்பாணனது ஆயிரந் தோள்களையும் தாரை தாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாக விருக்கையில், பரமசிவன் அருகில்வந்து வணங்கிப் பலவாறு ப்ரார்த்தித்ததனால் சிவபஜனஞ்

செய்தார்க்குப் பலன் கைமேல் கண்டதாக இருக்கட்டுமென்றெண்ணிய கண்ணபிரான் நான்கு கைகளோடும் உயிரோடும் அவனை விட்டருளினன் என்பதாம். எம்பெருமானார் சங்கராதி கர்வஶமனம் பண்ணினது, ஸ்ரீபாஷ்யாதி க்ரந்த ரசனையினாலும், அத்வைதி ப்ரப்ருதிகளை வாதப்போரில் வென்று ஆட்படுத்திக்கொண்டதனாலும் என்றுணர்க. இவ்விஷயம் மேலே மூன்றாவது பாதத்தின் விவரணத்தினாலும் விளங்கும்.

52. [2. ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச:] கண்ணபிரான்பரமான அர்த்தத்தில், யாதவர்களின் ப்ரகாசம் யயாதி சாபத்தினால் மங்கிக் கிடக்கையில், "கோபாலோ யாதவம் வம்சம் மக்நமப்யுத்தரிஷ்யதி" என்கிறபடியே அந்த ப்ரகாசத்தைத் தனது வலிமையினால் புநருத்தாரம் செய்தவன் என்று கொள்ளக் கடவது. யதுகுலத்திலே பிறந்து யாதவர்களை விளக்கமுறச் செய்தருளினவன் கண்ணபிரான் என்க. உடையவர்பரமான அர்த்தத்தில், 'யாதவப்ரகாச' என்று முழுச்சொல்லாகக்கொண்டு, அப்பெயர்பூண்ட மாயாவாதி குருவைத் தம்முடைய க்ருபாபலத்தினால் உத்தரிப்பித்தவர் என்று கொள்க. முதலில் தமக்கு உபாத்யாயராயிருந்த யாதவப்ரகாசரையும் தமக்கு அடிமைப்படுத்திக்கொள்ளும்படியான ப்ரபாவ முடையவர் எம்பெருமானார் என்க. இவ்வரலாறு உடையவர் சரிதையில் விரிவாகக் காணத்தக்கது.

53. [3. அவரோபிதவாந் ச்ருதே: அபார்த்தாந்] 'அபார்த்தாந் ச்ருதே: அவரோபிதவாந்' என்று அந்வயம். இதில் ஸபங்க ச்லேஷமுள்ளது. அபார்த்தாந் என்னும் பதம், (அ + பார்த்தாந்) என்றும் (அப + அர்த்தாந்) என்றும் பிரியும். பார்த்தனென்று அர்ஜுநனைச் சொல்லி, பார்த்தனல்லாத [அர்ஜுந விரோதிகளான] துர்யோதநாதிகளை அபார்த்தர்களென்று சொல்லுவதாகக் கண்ணன்பரமான அர்த்தத்தில் கொள்ளவேண்டும். ச்ருதி யென்று கீர்த்திக்கும் பெயர்; வேதத்திற்கும் பெயர். கண்ணபிரான் அபார்த்தர்களான துர்யோதநாதிகளைக் கீர்த்தியிலிருந்து கீழேயிறக்கிவிட்டான்; பாண்டவ பக்ஷபாதியாயிருந்து * மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர்குலைய நூற்றுவரும் பட்டழியச்செய்து அவர்களைக் கீர்த்தியிழந்தவர்களாகச் செய்தானென்றபடி. ஸ்வாமி ராமாநுஜரோ வென்னில்: [ச்ருதே: அபார்த்தாந் அவரோபிதவாந்] இதர மதஸ்தர்கள் வேதங்களுக்குச் செய்த அபார்த்தங்களை ஸமீசீநார்த்த ப்ரதர்சனத்தினால் நிரஸித்தருளினவர். ஆனதுபற்றியே *சமிதோதய சங்கராதி கர்வ ராக முதல் பாதத்தில் கூறப்பட்டாரென்று உணர்க.

54. இனி, ச்ருதியின் அபார்த்தங்களை எம்பெருமானார் நிரஸித்தருளின விதம் விவரிக்கப்படுகிறது. "அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்" என்கிற மூன்றாவது பாதத்தினால் ஸ்ரீராமாநுஜர் வேதத்திற்குப் பிறர் கூறின அபார்த்தங்களைத் தள்ளி உண்மைப்பொருள்களை யுரைத்தருளினதாகத் தெரிவிக்கப்படுகிறது. 'எந்த ச்ருதி வாக்யத்திற்கு எவ்விதமாகப் பிறர் ஏலாத பொருளைக் கூறினர்? அங்கு எம்பெருமானார் எவ்விதமான அர்த்தங் கூறி யருளினர்?' என்பதைத் தெரிவிக்க, ஈண்டு ஒரு விஷயத்தை யெடுத்துக்கொண்டு விவரிக்கின்றோம்: உபநிஷத்துக்களில் சில வாக்யங்களில் ஒரு தத்வமே உள்ளதாகவும் பல தத்வங்கள் இல்லை யென்பதாகவும் பேசப்பட்டுள்ளது. *நேஹ நாநாஸ்தி கிஞ்சந* என்பது ஒரு ச்ருதி வாக்யம். 'ந இஹ நாநா அஸ்தி கிஞ்சந' என்று பதம் பிரியும். இஹ நாநா கிஞ்சந நாஸ்தி—இவ்வுலகில் பலவென்று சொல்லக்கூடியது எதுவுமில்லை என்பது இந்த ச்ருதி வாக்யத்தின் பொருள். "ஏகமேவ அத்விதீயம்" என்கிற மற்றொரு ச்ருதி வாக்யமும் மேற்கூறிய பொருளை (அதாவது: பல தத்வங்கள் கிடையா; ஒரே தத்வந்தா னுள்ளது என்னும் பொருளை) த் திடப்படுத்தியுள்ளது. இப்படிப் பல வாக்யங்கள் உபநிஷத்துக்களில் உள்ளனவென்று வைத்துக்கொள்வோம்.

55. அந்த உபநிஷத்துக்களிலேயே மற்றுஞ் சில விடங்களில் பல தத்துவங்கள் உள்ளன வென்று காட்டுகின்ற வாக்யங்களேயும் காணுகின்ருேம்; அப்படிப்பட்ட வாக்யங்களில் சிலவற்றை ஈண்டெடுத்துக் காட்டுவோம்:—(1) *க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநேள ஈசதே தேவ ஏக:* இது ஒரு ச்ருதி வாக்யம். இதனுல், அசேதனப் பொருளும் சேதனப் பொருளும் இவ்விரண்டுக்கும் இறைவனை ஒரு பகவானும் ஆக மூன்று தத்துவங்களுள்ளனவாகச் சொல்லப்படுகிறது. (2) * ஜ்ஞாஜ்ஞேள த்வாவஜா வீச நீசேள *—இதுவும் ஒரு ச்ருதி வாக்யம். இதனுலும் ஒரே தத்வ மல்ல, வெவ்வேறுபட்ட தத்வங்களுண்டென்பது காட்டப்படுகிறது. (3) * த்வா ஸுபர்ணு ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே, தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது அத்தி அநச்நந்நந்யோஅபிசாகசீதி.*—இதுவும் அப்படிப்பட்ட மற்ருெரு ச்ருதிவாக்யம். இரண்டு பக்ஷிகள் ஒன்ருேடொன்று இணங்கிக் கொண்டு ஒரு வ்ருக்ஷத்தில் (அசேதநமானசரீரத்தில்) அணேந்துகிடக்கின்றன வென்றும், அவ்விரண்டு பறவைகளுள் ஒரு பறவையானது (ஜீவாத்மா) புண்ய பாபரூப கர்ம பலன்களே இனிதாக உண்டு களிக்கின்ற தென்றும், மற்ருெரு பறவையானது (பரமாத்மா) ஒன்றும் உண்ணுமல் மிக விளங்குகின்ற தென்றும் இந்த ச்ருதி வாக்யத்தினுல் கூறப்படுகின்றது. இதனுல் சேதந—அசேதந ஈச்வரர்களாகிற மூன்று தத்வங்களுள்ளன வென்பது தெளிவாக விளங்கிற்று. இப்படிப்பட்ட ச்ருதி வாக்யங்களும் உபநிஷத்துக்களில் பலவுள்ளன வென்று வைத்துக்கொள்வோம்.

56. பல தத்வங்கள் கிடையா; ஒரே தத்வந்தா னுள்ளதென்று கூறுவதாக முதலில் எடுத்துக் காட்டப்பட்ட ச்ருதிவாக்யங்களானவை அபேத ச்ருதி என வழங்கப்பெறும்; அத்வைத ச்ருதி யென்பதும் மறு பெயர். பிறகு, பல தத்வங்க ளுள்ளன வென்று கூறுவதாக எடுத்துக் காட்டப்பட்ட ச்ருதிவாக்யங்களானவை பேத ச்ருதி அல்லது த்வைத ச்ருதி யென்று வழங்கப்பெறும். இவை ஒன்ருேடொன்று முரண்படுகிற வார்த்தைகளாக இருக்கின்றன. 'பல தத்வங்கள் கிடையா; ஒன்றேதான்' என்று ஓரிடத்திற் சொல்லுவதும், பல தத்வங்க ளுண்டென்று பிறிதோரிடத்தில் விவரித்துக் காட்டிக் கூறுவதும் பரஸ்பரம் முரண்பட்டதே யன்ருே? ஒன்றுதான் தத்வம் என்று சொல்லிவிட்டால், பல தத்வங்களுள்ளனவாகச் சொல்வது கூடாது; பல தத்வங்கள் உண்டென்ருல் ஒன்றே தத்வ மென்பது பொருந்ாது; ஆகவே முரண்பாடு மூதலிக்கப்பட்ட தாயிற்று.

57. "வேதநூல் ஓதுகின்றதுண்மையல்லதில்லை மற்றுரைக்கிலே" என்ற திருமழிசையாழ்வார் திருவாக்கின்படி யதார்த்தமே யுரைக்கவல்ல உபநிஷத்துக்கள் பரஸ்பர விருத்தமாகவோ அஸங்கதமாகவோ சொல்லமாட்டா வாதலால், மேலே யெடுத்துக் காட்டின ச்ருதி வாக்யங்களே முரண்பாடு சிறிது மின்றியே ஸங்கதமாகப் பொருந்த விடுகிற வழி என்ன? என்பது ஆராயப்படவேண்டும். ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், ஒரு தத்வமே யுள்ளதென்று ஓதுகின்ற அத்வைத ச்ருதிகளாக நாம் மேலே எடுத்துக் காட்டிய அபேத ச்ருதிகளே முக்யமாகக் கொண்டு ஒன்றேதான் தத்வமென்று நிர்வஹித்தார்கள். பல தத்வங்க ளுண்டென்ருேதுகின்ற த்வைத ச்ருதிகளாக நாம் மேலே யெடுத்துக் காட்டிய பேத ச்ருதிகளே ஒரு வாறு ஒளபசாரிகமாக நிர்வஹிக்கலா மென்றும் அவர்கள் கருதினுர்கள். சேதனப் பொருள்களும் அசேதநப் பொருள்களு முள்ளனவாகத் தோன்றுவது மாயையின் தோற்றமே யாதலால், அப்படிப்பட்ட தோற்றத்தை நோக்காகக் கொண்டு பேத ச்ருதிகள் அவதரித்ததாக நிர்வஹித்துவிடலா மென்பது இவ்வத்வைதிகளின் கருத்து. ஆகவே த்வைத ச்ருதி

களைத் தள்ளி அத்வைத ச்ருதிகளையே முக்யமாகக் கொண்டபடியால், இவர்கள் அத்வைதிக ளென்று வழங்கப்படுகிறார்கள். பேதம் மாயைத்தோற்றம் என்கிறார்களாதலால் அவர்கள் மாயாவாதிக ளென்றும் வழங்கப்படுகிறார்கள். ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த ஸ்வாமிகள் த்வைத ச்ருதிகளான பேத ச்ருதிகளை முக்யமாகக்கொண்டு அத்வைத ச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்று கருதுகின்றார்களாதலால், அவர்கள் (மத்வாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர் கள்) த்வைதிகள் என வழங்கப்படுகிறார்கள்.

58. ஆக மேற்கூறிய (அத்வைதம் த்வைதம் என்கிற) இரண்டு ஸம்ப்ரதாயங்களி லும் ஒருவகையான உபநிஷத் வாக்யங்கள் ஒதுக்கப்பட்டு, ஒருவகையான உபநிஷத் வாக்யங் களே முக்யமாகக் கொள்ளப்படுகின்றன வென்பது தேறுகின்றது. சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்வங்கள் ஸத்யமாக உள்ளன வென்கிற அர்த்தம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகட்கும் அவரைச் சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று. ஒரே தத்வந்தா னுள்ளது என்கிற அர்த்தம் ஸ்ரீ மத்வாசார்ய ஸ்வாமிகட்கும் அவரைச் சார்ந்தவர்கட்கும் உடன்பா டன்று.

59. அத்வைதிகள் சில ச்ருதி வாக்யங்களைத் தள்ளவும், த்வைதிகள் சில ச்ருதி வாக்யங்களைத் தள்ளவும் நேர்ந்திருக்கின்ற தென்பதை இதுவரையில் விவரித்தோமானோம். இனி, ஒரு ச்ருதி வாக்யத்தையும் தள்ளாமல் உபநிஷத் வாக்யங் களெல்லாவற்றையுமே ஸம ரஸப்படுத்தி ஒன்றையு மொதுக்காமல் மிகவும் பொருத்தமாகவே நிர்வஹித்தருளினவர்கள் நம் பூருவாசாரியர்கள். அவர்களில் தலைவர் பகவத் ராமாநுஜர். ஒரே தத்வந்தா னுள்ளது என்று தெரிவிக்கிற ச்ருதி வாக்யங்களையும், பல தத்வங்க ளுண்டென்று தெரிவிக்கிற ச்ருதி வாக்யங்களையும் எப்படிப் பொருந்தவிட முடியு மென்னில்: நம்பேராசிரியர் எப்படிப் பொருந்த விட்டிருக்கிறா ரென்பது இனி உபபாதிக்கப்படுகிறது. உலகத்தில் ஒரு வஸ்து வைப் பல வென்றும் ஒன்றே என்றும் சொல்வதற்குப் பொருத்தமுண்டு. உதாஹரண மாக ஒரு கடிகாரத்தை யெடுத்துக் கொள்வோம்; அஃது ஒன்றா பலவா? என்று கேட்டால், கையில் ஒரு கடிகாரமே உள்ளதாகையால் ஒன்றே என்று சொல்வோம். ஆனால் அதை நாம் ஊன்றிப் பார்க்குங்கால், அதில் பலபல வஸ்துக்கள் அவயவங்களாக (உறுப்புகளாக)ச் சேர்ந்திருப்பது புலப்படாமற்போகாது. பல அவயவங்களோடு கூடிய அவயவியான வஸ்து ஒன்றே என்று ஏற்படுமேயல்லது ஒரு வஸ்துவுக்குமேல் வேறொரு வஸ்துவே இதில் கிடை யாதென்று சொல்வதாக ஒருகாலும் ஏற்படாது. இப்படி கடிகாரமென்கிற ஒரு வஸ்துவே யல்ல; உலகிற் காணும் எந்த வஸ்துவை யெடுத்துக்கொண்டு பார்த்தாலும், இப்படி ஒரு விதத்தில் ஐக்யமும் மற்றொருவிதத்தில் அநேகத்வமும் தோன்றியே தீரும். படுக்கை, தலை யணை, வண்டி, வீடு முதலிய ஒவ்வொரு வஸ்துவும் ஸ்தூல த்ருஷ்டியில் ஒரே வஸ்துவாகவும், உறுப்புகளை உற்றுக் காணுமிடத்துப் பல வஸ்துக்களாகவும் கொள்ளப்படுவது அநுபவ ஸித்தம். நம்மையே யெடுத்துக்கொள்வோம். 'ராமாநுஜ னென்பவன் ஒருவன்' என்று சொல்லுகிறோம். 'செவி வாய் கண் மூக்கு முதலான பல உறுப்புகளோடு கூடின ஆத்மா வாகிய அந்த வ்யக்தி ஒருவன்' என்று சொன்னதாகத் தேறுமேயல்லது, அவனிடத்தில் பல வஸ்துக்கள் இல்லை என்று சொன்னதாகத் தேறமாட்டாதன்றோ? இன்னமு மொன்று பாருங்கள். 'ராமாநுஜன் சிவப்பாயிருக்கிறான்' என்றும், 'ராமாநுஜன் மேதாவியாயிருக்கி றான்' என்றும் வழங்கி வருகிறோம். இவ்விரண்டு வார்த்தைகளிலும் 'ராமாநுஜன்' என்கிற சொல் உள்ளது. சிவப்பாயிருக்கிறா னென்னும்போது ராமாநுஜ னென்கிற சொல்லானது சரீரத்தை நோக்கியது; மேதாவியா யிருக்கிறானென்னும்போது அந்தச் சொல் ஆத்மாவை

நோக்கியது. ஏன்? சிவப்பு நிறம் சரீரத்திற்கு ஏற்குமேயல்லது ஆத்மாவுக்கு ஏலாது. மேதாவித்வம் (அதாவது அறிவுடைமை) ஆத்மாவுக்கு ஏற்குமேயல்லது, சரீரத்திற்கு ஏலாது. ஆகவே, ஒரே பதம் சில ஸமயங்களில் ஆத்மாவைக் குறிப்பதாயும் சில ஸமயங்களில் உறுப்பைக் குறிப்பதாயும் தேறுகின்றதென்பது தெற்றென விளங்கிற்று.

60. இனி, நாம் முன்னே காட்டிய பேத ச்ருதிகளையும் அபேத ச்ருதிகளையு மெடுத்துக்கொள்வோம். சித்து அசித்து ஈச்வரனென மூன்று தத்வங்க ளுள்ளனவாகச் சொல்லுகிற ச்ருதி வாக்யங்கள் (பேத ச்ருதிகளானவை), உண்மையாக அப்படிப்பட்ட மூன்று பொருள்களிருப்பனவாகச் சொல்லுகின்றன வாதலால் பொருந்தும். ஒன்றேயுள்ளது என்று சொல்லுகிற ச்ருதி வாக்யங்கள் (அபேத ச்ருதிகளானவை), சேதந அசேதநப் பொருள்களை ஶரீரமாகக் கொண்ட பரம்பொருள் ஒன்றே என்ற உண்மையைக் காட்டுகின்றனவாதலால் இவையும் பொருந்தும். இப்படி ஸமந்வயப்படுத்திக் காட்டுவதற்குத் துணைபுரியும் ச்ருதி வாக்யங்கள், 'யஸ்ய ப்ருதிவீ சரீரம்..........யஸ்ய ஆத்மா சரீரம்' இத்யாதியாக உள்ளவைகளாம். இவை சரீர சரீரிபாவத்தை விளக்கவல்ல வாக்யங்களாகும். பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகிற வாக்யங்க ளாதலால் கடக ச்ருதி யென்று வழங்கப் பெறுமிவை. இப்படிப்பட்ட ச்ருதி வாக்யங்களில் த்வைதிகளும் அத்வைதிகளும் கண் செலுத்தாமையினாலேயே, அவர்கள் ஸகல ச்ருதி வாக்யங்களையும் ஸமரஸப்படுத்த அவகாசமில்லை யாயிற்று.

61 நம்முடைய ஸம்ப்ரதாயத்திற்கு இந்த யுகாதியில் ப்ரதம ப்ரவர்த்தகரான நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் 'உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன்' என்கிற அருமருந்தன்ன ஸ்ரீஸூக்தியினால் சரீராத்மபாவத்தை நிதியாகக் காட்டி யருளினபடியால், ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் முதலான நம் ஆசார்ய சிகாமணிகள் அந்தத் திவ்ய ஸ்ரீஸூக்தியையே பின்பற்றி ஸகல ச்ருதி வாக்யங்களையும் ஸமரஸமாக நிர்வஹிக்க வல்லவர்களாயினர். அப்படிப்பட்ட ஆசார்யர்களில் தலைவரான ஸ்வாமி ராமாநுஜரைப்பற்றி 'அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்' என்று கூறியது மிகப் பொருத்தமானதென்று உணரத்தக்கது. ஆக, இவ்வளவும் விசிஷ்டாத்வைதக் கொள்கையை விளக்கமாக விவரித்தோமானோம். இவ்வர்த்தங்களையெல்லாம் ஸாரமாகவும் சுருக்கமாகவும் நெஞ்சிற் பதியவைத்துக்கொள்ள ஸ்ரீ வேதாந்ததேசிகன் தாமே ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் அருளிச்செய்த ச்லோகரத்ந மொன்றுண்டு; அதைக் கண்டபாடம் செய்வது நலமென்று கருதிக் கீழே குறிப்பிடுகிறோம். "மிதோ பேதம் தத்வேஷ்வபிலபதி பேதச்ருதிரதோ விசிஷ்டைக்யாத் ஐக்யச்ருதிரபி ச ஸார்த்தா பகவதி, இமாவர்த்தௌ ஜோப்தும் நிகிலஜகதந்தர் யமயிதா நிரீசோ லக்ஷ்மீச: ச்ருதிபிரபராபி: ப்ரணிததே" என்பதாமது.

62. பகவத்ராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு சரீராத்மபாவமே உயிரானதென்றும், அதைத் திடமாகத் தெரிந்துகொள்ளப்பெறில் எந்த மதாந்தரஸ்தர்களையும் எளிதில் வென்றுவிடலாமென்றும் ஸ்ரீ தேசிகன் தாமே ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஒரு ச்லோகரத்ந மருளியுள்ளார்; அதுவும் கண்ட பாடஞ் செய்துகொள்ளத் தக்கதென்று கீழே குறிப்பிடலாகிறது;—

"யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம் வித்யாத் அவித்யாதம:-
ப்ரத்யூஷம் ப்ரதிதந்த்ரமந்திமயுகே கச்சித் விபச்சித்தம: ।
தத்ரைகத்ர ஜடித்யுபைதி விலயம் தத்தந்மதஸ்தாபநா—
ஹேவாகப்ரதமாந ஹைதுககதாகல்லோல கோலாஹல: ॥" என்பதாம்.

இந்த ச்லோகத்தின் கருத்தாவது—அகவிருள் நீங்குவதற்கு ஸுப்ரபாத காலம் போன்றதும் எம்பெருமானாராலே விரிவாக நிரூபிக்கப்பட்டதுமான சரீராத்மபாவமாகிற இந்த ப்ரதிதந்த்ரத்தை இந்த யுகத்தில் யாவனொருவன் நன்கு தெரிந்துகொள்ளப்பெறுகிறானே, அப்படிப்பட்ட ஒரு வித்வானுடைய முன்னிலையில் மதாந்தரஸ்தர்கள் எத்தனைபேர் திரண்டு எவ்வளவு அட்டஹாஸங்கள் செய்தாலும் அவை ஒரு நொடிப்பொழுதில் தொலைந்திடுமென்பதாம். மற்றுமுள்ள ஸித்தாந்திகள் ஒருவருமிசையாதே தன்னுடைய ஸித்தாந்தத்திற்கே அஸாதாரணமான அர்த்தம் ப்ரதிதந்த்ரமெனப்படும். எம்பெருமானார் தர்சனத்திற்கே அஸாதாரணமுமாய் ப்ரதாநமுமான அர்த்தம்—சேதநாசேதநங்களுக்கு மீச்வரனுக்குமுண்டான சரீராத்மபாவம். இதுதன்னை உள்ளபடி தெரிந்துகொள்ளப் பெற்ற பாக்யசாலிகளுக்கு எந்த வேதாந்த வாக்யமும் எளிதாகப் பொருந்திவிடும். அஸங்கதார்த்தமென்றோ ஔபசாரிகார்த்தமென்றோ ஒதுக்கவேண்டியதான வேதாந்தவாக்யம் எதுவுமேயிராது. இவ்வொரு விஷயத்தைக்கொண்டே எந்த ப்ரதிபக்ஷிகளையும் வென்றுவிடலாமென்றதாயிற்று. .... ... ... ... *

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ காஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம்

**அண்ணங்கரா[illegible]யர்**

எழுதிய

எம்பெருமானாரறுபத்திரண்டு முற்றுப்பெற்றது.